விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 26 சனிக்கிழமை (10.07.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 203

### கொரோனா +1,515

(கொழும்பு)
இலங்கையில் நேற்று மேலும் 1,515 பேருக்கு கொரோனாதொற்று உறுதி செய்யப்பட் 19

## பசிலை ஆதரித்து ஒன்றுகூடி பட்டாசு வெடித்தவர்கள் மீது ஏன் கொரோனா சட்டம் பாயவில்லை

### அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கேள்வி

(கொழும்பு)
"ஜனநாயகத்தைப் பாதுகாப்போம் - மனித சுதந்திரத்தைப் பாதுகாத் 19



# எதிர்காலத்தில் எவரேனும் போராட்டம் நடத்தினால் கைதுகள் தொடரும்



### பாராளுமன்றில் அமைச்சர் சரத் வீரசேகர

(கொழும்பு)
எதிர்காலத்தில் எவரேனும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுத்தால் கைது நடவடிக்கைகள் தொடரும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

### கொரோனா 43 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற்றுக் காரணமாக மேலும் 43 பேர் 19

### கொரோனாவால் வவுனியாவில் பெண் மரணம்

(வவுனியா)
வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த 59 வயது பெண் மணி ஒருவர் கோவிட் தொற்று நோயால் நேற்று மரணமடைந்துள்ளார்.
குறித்த பெண் 19

### நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலய படுகொலையின் 26ஆம் ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)
நவாலிசென்.பீற்றர்ஸ் தேவாலய படுகொலை 19

### பசில் பதவியேற்ற நாளில் பண்டுவஸ்நுவர பிரதேச சபையில் சபையை இழந்த மொட்டு கட்சி

(கொழும்பு)
பண்டுவஸ்நுவர பிரதேச சபைக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியால் முன்மொழியப்பட்ட தவிசாளர் தோற்கடிக்கப்பட்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் பிரேரிக்கப்பட்ட வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார்.
மேற்படி பிரதேச 19

### போராட்டத்தை தடுப்பது அடிப்படை மனித உரிமை மீறல் பொலிஸார் சட்டத்தை மீறுகின்றமைக்கு அரசாங்கமா காரணம் - அநுர கேள்வி

(கொழும்பு)
ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்டோரின் உத்தரவின் பேரிலா, பொலிஸார் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி செயற்படுகின்றனர் என ஜே.வி.பி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.
நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற விவாதத்தில் 19

### ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்பில் பொலிஸாரின் நடவடிக்கை ஏற்கக்கூடியது அல்ல

### அமைச்சர் நாமல் விசனம்

(கொழும்பு)
ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்பில் பொலிஸாரின் நடவடிக்கை ஏற்புடைய 19

### பரீட்சைகள்

புலமைப் பரிசில் ஒக். 03
க.பொ.த (உ/த) ஒக். 4 - 31

(03ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.மாவட்டத்தில் நேற்று 5,957 ஆசிரியர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று வெள்ளிக்கிழமை 5 ஆயிரத்து 957 ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
அத்துடன், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 19

### மனித உரிமை நிலைவரங்கள் இலங்கையில் கடந்த ஆண்டில் மிக மோசம்

### பிரிட்டன் மீண்டும் எச்சரிக்கை

(3ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான உரிமைக்கு மதிப்பளிக்க வேண்டியது கட்டாயமாகும்

## முன்னாள் நிதியமைச்சர் மங்கள



(கொழும்பு)

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான உரிமைக்கு மதிப்பளிக்க வேண்டியது கட்டாயமாகும் என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டங்கள் தடைசெய்யப்பட்டுள்ளமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அப்பதிவில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

நான் நிதியமைச்சராகப் பதவி வகித்த காலப்பகுதியில் அநேகமாக நாளாந்தம் எனது அமைச்சிற்கு முன்னால் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களைக் கலைப்பதற்கு நான் பொலிஸாருக்கு அழைப்பு விடுக்கவில்லை. மாறாக போராட்டம் முடிவிற்குக் கொண்டுவரப்படும் வரையில் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம்.

சில சந்தர்ப்பங்களில் அவர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவையாகக்கூட இருக்கலாம். ஆனால் கோரிக்கைகளை முன்வைப்பதற்கும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்குமான அவர்களின் உரிமைக்கு நாம் மதிப்பளிக்க வேண்டியது கட்டாயமாகும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் கட்டாயத்தனிமைப்படுத்தலுக்கு உட்படுவதற்கு நிர்பந்திக்கப்பட்டிருக்கிறாரகள். கட்டாயத் தனிமைப்படுத்தல் என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாததும் சட்டத்திற்கு முரணானதுமாகும் என்றும் மங்கள சமரவீர அவரது டுவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலுகட்டாயமாகப் பொலிஸாரால் இழுத்துச் செல்லப்படும் புகைப்படங்களையும் பகிர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

# யாழில் 20 பேர் உட்பட வடக்கில் 27 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12 பேர் உட்பட வடக்கில் 27 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ். போதனாவில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களில் 20 பேர் யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

அதன் அடிப்படையில், காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12 பேர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர், யாழ். போதனா வைத்தியசாலையில் 02 பேர், தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் ஒருவர், சங்கானை பிரதேச வைத்தியசாலையில் ஒருவர், பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையில் ஒருவர், மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 07 பேருக்கு தொற்றுறுதி. இதேவேளை, முழுங்காவில் இலங்கை கடற்படை முகாமில் ஐந்து பேர், பலாலி விமானப்படை முகாமில் ஒருவர் ஆகியோருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் நேற்று 192 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் ஒருவருக்கும் தொற்று அறிகுறி இனங்காணப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-03)

### எதிர்வரும் திங்கள் முதல்

# இணையவழி கற்பித்தலிலிருந்து ஆசிரியர்கள் விலகத் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இணையவழி கற்பித்தல் நடவடிக்கையில் இருந்து ஆசிரியர்கள் விலக உள்ளதாக ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஆசிரியர் சங்கங்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள், பிணையில் விடுவிக்கப்பட்டதன் பின்னர், நீதிமன்ற உத்தரவைக் கருத்திற் கொள்ளாமல், தனிமைப்படுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாங்கம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் வரை, இணையவழி கற்பித்தல் நடவடிக்கையில் இருந்து விலகியிருப்பதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். (ம-03)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

### சந்தைகள், இறைச்சிக் கடைகளை பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2021

சபையினால் கீழ்க்குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக் கடைகளை 2021ஆம் ஆண்டின் குறிக்கப்பட்ட காலப்பகுதிக்கு (01.08.2021 - 31.12.2021) குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலக்கேள்விகள் கோரப்படுகின்றன.

**ஏலம் நடைபெறும் திகதி : 2021.07.20 (செவ்வாய்கிழமை) முற்பகல் 11.00 மணி.**

**இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகம், புத்தூர்**

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | |
| 01 | அச்சுவேலி பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி தரிப்பிடமும் மற்றும் அச்சுவேலி பஸ் நிலைய வாகன தரிப்பிடமும் | 250.00 | 25000.00 |
| 02 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 250.00 | 2000.00 |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | |
| 01 | புத்தூர் பொதுச்சந்தை | 250.00 | 2000.00 |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | |
| 01 | கோப்பாய் ஆட்டிறைச்சிக் கடை | 250.00 | 3000.00 |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | |
| 01 | உரும்பிராய் கோழி இறைச்சிக் கடை | 250.00 | 3000.00 |

ஏலத்தில் பங்குகொள்பவர்கள் கேள்விப்படிவக் கட்டணம் ரூபாய் 250.00 இனை செலுத்துதல் வேண்டும். ஏலக்கேள்வியில் தெரிவுசெய்யப்படும் ஏலதாரர்கள் உடனடியாக மீளளிக்கக்கூடிய வைப்புத் தொகையினை சபைக்கு செலுத்துதல் வேண்டும்.

ஏலத்தில் பங்கு பெறவிரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையினை கொண்டுவருவதுடன் அதன் நிழற்படப் பிரதியையும் கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது உரிய பெயரிலுள்ள மின்சாரப் பட்டியல் பிரதி அல்லது வங்கிக்கணக்குப் புத்தகத்தின் பிரதி ஏதாவதொன்று சமர்ப்பித்தல் வேண்டும். ஏலக்கேள்விக்கான ஆரம்ப கேள்வித் தொகையினை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3பகுதியினை 2021.07.26 ஆம் திகதி நண்பகல் 2.00 மணிக்கு முன்பாக சபையின் உப அலுவலகத்தில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ளல் வேண்டும்.

**தியாகராஜா நிரோஸ்**
**தவிசாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

10.07.2021
(C-2313)



## கண்ணீர் அஞ்சலி



தாவடி அம்பலவாண வேத விநாயகர் ஆலய தொண்டரும்
வேத விநாயகர் விளையாட்டுக்கழக உறுப்பினருமாகிய
**தெ. ஜனகனின்** அன்புத் தந்தையார்

**அமரர்**

## நாகலிங்கம் தெய்வேந்திரம்

அவர்கள் நேற்று (09.07.2021) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல விநாயகப் பெருமானை வேண்டுவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தாவடி அம்பலவாண வேத விநாயகர் ஆலய தொண்டர்களும் வேத விநாயகர் விளையாட்டுக் கழகத்தினரும்.**

(C-2316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் சென்ற ஆண்டில் மிகவும் மோசம்

## மீண்டும் எச்சரிக்கும் பிரிட்டன்

(லண்டன் )

**இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் கடந்த 2020 ஆம் ஆண்டில் பெரிதும் மோசமடைந்திருப்பதாக சுட்டிக்காட்டியிருக்கும் பிரிட்டன், போரின் பின்னரான காலத்தில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய வற்றை உறுதிப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகளிலும் பாரிய பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.**

அதுமாத்திரமன்றி பயங்கரவாதத்தடைச்சட்டத்தை மீளாய்வு செய்வதாக அளித்த வாக்குறுதியையும் மீறி, 2020 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் அச்சட்டத்தைப் பயன்படுத்தி வந்திருப்பதாகவும் பிரிட்டன் குற்றஞ்சாட்டியுள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உதவக்கூடிய செயற்றிட்டங்களில் முதலீடு செய்வதற்கும் சிவில் சமூகக் குழுக்களின் வகிபாகங்களை வலுப்படுத்துவதற்கும் போரின் பின்னரான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைத் தொடர்ந்து வலியுறுத்துவதற்கும் தயாராக இருப்பதாகவும் பிரிட்டன் உறுதியளித்துள்ளது.

பிரிட்டனின் வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தினால் உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தின் நிலவரம் தொடர்பில் வருடாந்தம் அறிக்கை வெளியிடப்படும்.

அந்த வகையில் குறித்த அலுவலகத்தினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டிற்கான அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தடைச்சட்டம் மீளாய்வு செய்யப்படும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 43 ஆவது கூட்டத்தொடரின்போது அளிக்கப்பட்ட வாக்குறுதியையும் மீறி, 2020 ஆம் ஆண்டில் அரசாங்கம் தொடர்ச்சியாகப் பயங்கரவாதத்தடை ச்சட்டத்தைப் பயன்படுத்தி வந்தது.

மனித உரிமைகள் சட்டத்தரணியான ஹிஜாஸ் ஹிஸ்புல்லா 2020 ஏப்ரல் மாதம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இலங்கையின் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். அவர் எவ்வித குற்றச்சாட்டுக்களும் பதிவு செய்யப்படாமல், நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் ஊழல் ஒழிப்பு ஆகிய விடயங்கள் தொடர்பில் இயங்கும் செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், காணாமல் போனோரின் குடும்பங்கள் மற்றும் தனிநபர்கள் மீதான கண்காணிப்பு, அடக்குமுறைகள் மற்றும் இணையவழித் தாக்குதல்கள் என்பன இக்காலப்பகுதியில் அதிகரித்தமையினை சர்வதேச மனித உரிமைக் குழுக்கள் அவதானித்துள்ளன.

மேலும் 2021 ஆம் ஆண்டில் இலங்கையில் மனித உரிமைகள், பாலின சமத்துவம் மற்றும் சிறுபான்மையினத்தவரின் சுதந்திரம் ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கான அழுத்தங்களை பிரிட்டன் தொடர்ந்தும் வழங்கி வந்தது.

இந்நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உதவக்கூடிய செயற்றிட்டங்களில் முதலீடு செய்வதற்கும் சிவில் சமூகக்குழுக்களின் வகிபாகங்களை வலுப்படுத்துவதற்கும் போரின் பின்னரான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைத் தொடர்ந்து வலியுறுத்துவதற்கும் பிரிட்டன் தயாராக இருக்கின்றது என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

## யாழ். போதனாவில் இரத்தத் தட்டுப்பாடு

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் மீண்டும் இரத்தத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக மேற்படி வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினர் அறிவித்துள்ளனர். எனவே, இரத்ததானம் செய்யக் கூடியவர்கள் அருகிலுள்ள இரத்த வங்கிக்கு சமுகம் கொடுத்து இரத்ததானம் செய்து உயிர்காக்கும் பணிக்கு உதவுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மேலதிக தொடர்புகளுக்கு 077 210 5375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவித்துள்ளார். (4-6-8-18)




## பரீட்சைத் திகதிகள் அறிவிப்பு

(கொழும்பு);

2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த.உயர்தரம் மற்றும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைகள் குறித்த திகதிகள் கல்வி அமைச்சினால் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.

அதற்கமைய,

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் 3 ஆம் திகதியும்,

உயர்தரப் பரீட்சை ஒக்டோபர் 4 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை நடைபெறும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார். (நி-5)



**சுவிஸை சேர்ந்த ஆனந்தராஜா சர்மிலா தம்பதியினரின் புதல்வி அனுசியா வின் பிறந்த நாளை முன்னிட்டு 5 துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.**

([illegible])

## விசா செல்லுபடியாகும் காலம் நீடிப்பு




(கொழும்பு)

தற்போது நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களின் அனைத்து விசாக்களினதும் செல்லுபடிக் காலம் மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிக்கப்பட் டுள்ளது.

அதனடிப்படையில் நேற்று முதல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. விசாக் காலம் நிறைவடை ந்தவர்களுக்கு அந்த காலப் பகுதிக்கான விசாக் கட்டணம் அறவிடப்படுமே தவிர எந்த வித அபராதமும் விதிக்கப்பட மாட்டாது என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடா வாடா தோழா...நாம ஆடிப் பார்ப்போம் ஆடிப் பார்ப்போம் ஜோரா...

## மெஸ்சி - நெய்மர் இன்று கோபா பைனலில் போர்


நெய்மர்

கோபா அமெரிக்க கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில் மெஸ்சியின் ஆர்ஜென்ரீனா, நெய்மரின் பிரேசிலை எதிர்கொள்கிறது.

தென் அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான கோபா அமெரிக்க கால்பந்து தொடர் பிரேசிலில் நடக்கிறது. ரியோ டி ஜெனிரோவின் வரலாற்று சிறப்பு வாய்ந்த மரக்கானா மைதானத்தில் இறுதிப் போட்டி நடக்கிறது. உலகத் தரவரிசையில் 3ஆவது இடத்திலுள்ள நெய்மரின் பிரேசில் அணி, 8ஆவது இடத்திலுள்ள மெஸ்சியின் ஆர்ஜென்ரீனாவை சந்திக்கிறது.


பயிற்சியில் மெஸ்சி

**நண்பர்கள்**

மெஸ்சி, நெய்மர் இருவரும் நல்ல நண்பர்கள். பார்சிலோனா அணிக்காக 2015ல் சம்பியன்ஸ் லீக் கோப்பை வென்று தந்தனர். 2011இல் நடந்த கழக உலக கிண்ணத் தொடரில் நெய்மரின் பிரேசில் சான்டோஸ் அணி, 4-0 என மெஸ்சி அணியை வென்றது.

கால்பந்து 'ஜாம்பவான்' மெஸ்சி, தேசிய அணிக்காக ஒரு கிண்ணம் கூட வென்று தந்தது இல்லை. இன்று ஐந்தாவது முறையாக (2014 உலக கிண்ணம், 2007, 2015, 2016, 2021 கோபா) முக்கிய தொடரின் இறுதியில் களம் காண்கிறார்.

இத்தொடரில் ஆர்ஜென்ரீனா 11 கோல் அடித்தது. இதில் 4 கோல் அடித்த மெஸ்சி, சக வீரர்கள் 5 கோல் அடிக்க உதவியுள்ளார். இவருடன் ஏஞ்சல் டி மரியா, அரையிறுதியில் அசத்திய கோல் காப்பாளர் எமிலி யானோ கைகொடுத் தால் 1993க் குப் பின் முதல் கிண்ணம் வெல்லலாம். தற்காப்பு பகுதி பலவீனமாக இருப்பது எதிரணியின் நெய்மர் போன்ற வீரர் களுக்கு சாதகமாக அமை யலாம்.

**நெய்மர் பலம்**

'நடப்பு சம்பியன்' பிரேசில் அணி கடந்த 10 கோபா தொடரில் 5இல் கிண் ணம் வென்றது. தற்போது ஆறாவது முறையாக சாதிக்க திட்டமிட்டுள்ளது. முன னணி வீரர் நெய்மர், புதிய நட்சத் திரம் பாகுயடா தலா 2 கோல் அடித் துள்ளனர். தவிர கேஸ்மிரோ, பர்போசா என 8 வீரர்கள் தலா ஒரு கோல் அடித்தனர்.

பிரேசில் அணி கடந்த 5 கோபா தொடர் பைனலில், நான்கு முறை குறைந் தது 2 கோல் வித்தியாசத் தில் வென்றுள்ளது.

இருப்பினும் இளம் வீரர்கள் அடங்கிய பிரேசில் அணி முக்கிய தொடரின் பைனல் நெருக்கடியை சமாளிக்குமா

**46**

பிரேசில் அணி சொந்தமண்ணில் நடந்த கோபா போட்டிகளில் கடந்த 46 ஆண்டுகளாக தோற்காமல் வலம் வருகிறது. 26 போட்டிகளில் 17 வெற்றி, 9 'சமன்' செய்தது. தவிர தொடர்ந்து 12 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது.

## 278 பந்., 37 ஓட்.,

### தோல்வியை தடுத்து நிறுத்திய ஹசிம் அம்லா



கவுன்டி போட்டியில் 278 பந்துகளில் 37 ஓட்டங்கள் எடுத்து உதவிய அம்லா, போட்டி சமனாக கைகொடுத்தார்.

இங்கிலாந்தில் நடக்கும் கவுன்டி தொடரில் சர்ரே - ஹம்ஷயர் அணிகள் மோதின.

முதல் இன்னிங்ஸில் ஹம்ஷயர் அணி 488 ஓட்டங்கள் எடுத்தது. சர்ரே அணி முதல் இன்னிங்ஸில் 72 ஓட்டங் களுக்கு சுருண்டு 'பொலோ ஒன்' ஆனது.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த சர்ரே அணி தொடர்ச்சியாக விக்கெட்டுகளை இழந்து தோல்விப் பாதையில் சென்றது.

உறுதியான ஆட்டத்தை வெளிப்படுத்திய அம்லா, ஒருபக்கம் விக்கெட் சரிவை தடுத்து நிறுத்தி, 278 பந்து களில் 37 ஓட்டங்கள் எடுத்தார்.

நான்காவது நாள் முடிவில் சர்ரே அணி இரண்டாவது இன்னிங்சில் 122/8 ஓட்டங்கள் எடுக்க போட்டி சமனானது.

## பிளிஸ்கோவா - ஆஷ்லே

### விம்பிள்டன் பைனலில் மோதல்


பிளிஸ்கோவா

விம்பிள்டன் டென்னிஸ் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டிக்கு ஆஷ்லே பார்டி, கரோலினா பிளிஸ்கோவா முன்னேறினர்.

இங்கிலாந்தின் லண்டனில், விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் நடக்கிறது. இதன் பெண் கள் ஒற்றை யர் பிரிவு அரையிறுதியில் உலகின் 'நம்பர்-1' அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி, 28ஆவது இடத்தில் உள்ள ஜேர்மனி யின் கெர்பர் மோதினர்.

முதல் செட்டை 6-3 எனக் கைப் பற்றிய அவுஸ்திரேலிய வீராங்கனை, 'டை பிரேக்கர்' வரை சென்ற 2ஆவது செட்டை 7-6 என தன்வசப்படுத்தி னார்.

ஒரு மணி நேரம், 26 நிமிடம் நீடித்த போட்டியில் அசத்திய ஆஷ்லே பார்டி 6-3, 7-6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இத் தொட ரில் முதன்முறையாக இறுதிப் போட்டிக்கு நுழைந்தார்.

**பிளிஸ்கோவா அபாரம்:**

மற்றொரு அரையிறுதியில் பெலரசின் சபலென்கா, செக் குடியரசின் கரோலினா பிளிஸ் கோவா மோதினர். முதல் செட்டை சபலென்கா 7-5 என கைப்பற்றினார்.

அடுத்த செட்டை பிளிஸ்கோவா 6-4 என வென் றார். வெற்றியாளரை முடிவு செய்த மூன்றா வது கடைசி செட்டிலும் பிளிஸ்கோவா 6-4 என கைப்பற்றினார்.

முடிவில் பிளிஸ்கோவா 5-7, 6-4, 6-4 என்ற கணக் கில் வெற்றி பெற்று, இறுதிப் போட் டிக்கு நுழைந்தார்.

இறுதிப் போட்டியில் ஆஷ்லே பார்டி - பிளிஸ்கோவா மோதுகின்றனர்.


ஆஷ்லே

## பாக் தோல்வி


4 விக்கெட்டுக்களை கொய்த மஹ்மூத்

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் அசத்திய இங்கிலாந்து அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து சென்றுள்ள பாகிஸ்தான் அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டி கார்டிப் நகரில் நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

பாகிஸ்தான் அணி 35.2 ஓவர்களில் 141 ஓட்டங் களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பகார் ஜமான் (47), ஷதாப் கான் (30) ஆறுதல் கொடுத்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் சகிப் மஹ்மூத் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

சுலப இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணிக்கு டேவிட் மலான் (68*), ஜாக் கிராலே (58*) அரைசதம் கடந்து கைகொடுக்க, 21.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை (142) 9 விக்கெட்டுக்களால் அடைந்தது.

போட்டியின் ஆட்ட நாயகன் விருதை இங்கிலாந்தின் சாகிப் மஹ்மூத் வென்றார்.

3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 2 போட்டிகள் எஞ்சியுள்ள நிலையில் இங்கிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்

15 . 07 . 2000



ஆண்டவன் அடியில்

21 . 06 . 2020

அமரர். **கோணறஞ்சன் மதுசன்**

ஒராண்டு உருண்டோடினாலும் ஆறுமோ எமதுள்ளம்
உடல்விட்டு எமதுயிர் காற்றினில்
கலந்தாலும் மீளுமோ இந்த ரணம்
ஆணழகை வாரிக்கொடுத்த இறைவா
ஆயுளை வாரிக் கொடுக்க மறந்ததேனோ
உம்மைப் பரிசாகத் தந்த இறைவா
நாம் துடிதுடிக்கத் தட்டிப் பறித்ததேனோ
உமது மறு ஜென்ம வாழ்வாவது
சகல சௌபாக்கியங்களும் பெற்று மலர
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(7161)

குளிர்ந்த வேலி, கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்
076 402 3599



# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
# ஆதனப் பெயர்மாற்றம்

## கம்பாவளை ஒழுங்கை, இல 24, 28 வட்டாரம் -05

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 05 கம்பாவளை ஒழுங்கையிலுள்ள இல 24,28 ஆகிய ஆதனங்கள் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் சிற்றம்பலம் சட்டநாதர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை தம்பிப்பிள்ளை இராஜனும் பெண் இராஜேஸ்வரியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு சி.கந்தசாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3173/18.01.1955ம் இலக்க உறுதியால் வேலாயுதர் நல்லதம்பி ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தினை கந்தன் பெரியதம்பியும் பெண் ஞானேஸ்வரியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வ.பரமானந்தம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1314/18.01.1978 ம் இலக்க உறுதியால் குறித்த தம்பிப்பிள்ளை இராஜனும் பெண் இராஜேஸ்வரியும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார்கள்.

குறித்த கந்தன் பெரியதம்பி காலஞ்செல்ல குறித்த ஆதனத்தில் சொரியலாய் 3/4 பங்கு பெரியதம்பி கைம்பெண் ஞானேஸ்வரிக்கும், சொரியலாய் 1/4 பங்கு பெரியதம்பி சர்வேஸ்வரனுக்கும் பெரியதம்பி மகள் பிறேமலாவுக்கும் பெரியதம்பி பிரேமதாஸுக்கும் பெரியதம்பி தசனுக்கும் சொந்தமும் உரித்துமாக வந்தடைந்தது.

குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியான கம்பாவளை ஒழுங்கையிலுள்ள 24ம் இலக்க ஆதனத்தினை பெரியதம்பி தசன் பெண் மேரி றஜீனா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1798/15.07.2019ம் இலக்க உறுதியால் பெரியதம்பி கைம்பெண் ஞானேஸ்வரியும் பெரியதம்பி சர்வேஸ்வரனும் பெரியதம்பி மகள் பிறேமலாவும் பெரியதம்பி பிறேமதாஸும் ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தில் மற்றைய பகுதியான கம்பாவளை ஒழுங்கையிலுள்ள 28ம் இலக்க ஆதனத்தினை பெரியதம்பி பிறேமதாஸ் பெண் சிவநந்தினி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1799/15.07.2019ம் இலக்க உறுதியால் பெரியதம்பி கைம்பெண் ஞானேஸ்வரியும் பெரியதம்பி சர்வஸ்வரனும் பெரியதம்பி தசனும் பெரியதம்பி மகள் பிறேமலாவும் ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

மேற்படி 24 ஆம் இலக்க ஆதனத்திற்கு பெரியதம்பி தசன் பெண் மேரி றஜீனா ஆகியவரும் கம்பாவளை ஒழுங்கையிலுள்ள 28 ஆம் இலக்க ஆதனத்திற்கு பெரியதம்பி பிறேமதாஸ் பெண் சிவநந்தினி ஆகியவரும் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனங்கள் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராத விடத்து குறித்த 24 ஆம் இலக்க ஆதனத்திற்கு பெரியதம்பி தசன் பெண் மேரி றஜீனா ஆகியவரினதும் 28 ஆம் இலக்க ஆதனத்திற்கு பெரியதம்பி பிறேமதாஸ் பெண் சிவநந்தினி ஆகியவரினதும் பெயர்களில் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தவிசாளர்/செயலாளர்
வலிகாமம் மேற்கு பிரதேசசபை

(7168)


# பிரச்சினை இருப்பதாலேயே மக்கள் வீதிக்கிறங்கியுள்ளனர்

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர்

(கொழும்பு)

**பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து நாடு தழுவிய ரீதியில் பொது மக்கள் முன்னெடுத்துள்ள போரா டத்தை பொலிஸார் பலவந்தமான முறையில் அடக்குவது ஜனநாயகத்திற்கு முற்றிலும் விரோதமானது.**



பொதுமக்களின் கோரிக்கை குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். பிரச்சினை இருப்பதாலேயே மக்கள் வீதிக்கிறங்கியுள்ளார்கள் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அபயராம விகாரையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட் -19 வைரஸ் தாக்கத்தை கருத்திற் கொண்டு போராட்டம், ஒன்றுகூடல் அகியவற்றுக்கு மறு அறிவித்தல் விடுக்கும் வகையில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் சமூக இடைவெளியை பின்பற்றி போராட்டத்தில் ஈடுபட்டாலும் பொலிஸார் அதனை கலவரமாக மாற்றி விடுகிறார்கள்.

போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான முரண்பாடுகள் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

போராட்டத்தில் ஈடுபடுபவர்களை பொலிஸார் பலவந்தமான முறையில் அடக்குவது ஜனநாயக கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது. நாட்டின் ஊடகத்துறை மற்றும் ஜனநாயக உரிமை குறித்து சர்வதேசம் கூர்மையாக அவதானித்துள்ள வேளையில் இவ்வாறான செயற்பாடுகளும் இடம்பெறுவது நாட்டை மேலும் பலவீனப்படுத்தும்.

ஜனநாயக கொள்கைக்கு முரணான செயற்பாடுகளில் ஈடுபடுவதை அரசாங்கமும் பொலிஸாரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வீதிக்கிறங்கி போராடும் மக்களின் போராட்டம் குறித்த அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். பொருளாதார ரீதியில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. பிரச்சினை உள்ள காரணத்தினாலேயே மக்கள் வீதிக்கிறங்கி போராடுகிறார்கள் என அவர் தெரிவித்தார். (நி-5)

# தனிமைப்படுத்தல் விதிகள் மூலம் ஆர்ப்பாட்டத்தை தடுப்பது அடிப்படை உரிமை மீறல்

## ஐக்கிய மக்கள் சக்தி மனுத்தாக்கல்

(கொழும்ப)

தனிமைப்படுத்தல் விதிகளை பயன்படுத்தி ஆர்ப்பாட்டங்களை தடுப்பதற்கு பொலிஸார் முயற்சிப்பதனூடாக அடிப்படை உரிமை மறுக்கப்படுவதாக உத்தரவிடக் கோரி ஐக்கிய மக்கள் சக்தியினரால் உயர் நீதிமன்றத்தில் மூன்று அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷன ராஜகருணா மற்றும் மயந்த திசாநாயக்க ஆகியோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பொலிஸ்மா அதிபர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், சுகாதார அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுக்களின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரை தனிமைப்படுத்தல் விதிமுறைகளின் போர்வையில், கைது செய்து தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவது, இலங்கை அரசியலமைப்பினூடாக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை முற்றாக மீறும் செயல் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதிவாதிகளை மன்றில் முன்னிலையாகுமாறு அறிவித்து விசாரணை நடத்துமாறு மனுதாரர்கள் கோரியுள்ளனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் பசிலின் வருகை பொருளாதாரத்திற்கு உறுதுணை

(சாவகச்சேரி)


அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வருகை நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை மீளக் கட்டியெழுப்ப பெரிதும் உறுதுணையாக இருக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அமைச்சர் பசில் ராஜபக்ஷ கடந்த காலங்களில் அரசாங்கம் இக்கட்டான நிலையில் இருந்த வேளையில் நாட்டையும் நாட்டு மக்களையும் உயர்த்தியவர்.

கடந்த காலத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்து நாட்டில் பல அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்தவர். பசில் ராஜபக்ஷ பொருளாதார அமைச்சராக இருந்த காலத்தில் வடக்கு.மற்றும் கிழக்கு மாகாணங்கள் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டிருந்தன.

அமைச்சரின் மீள் வருகை நிச்சயம் நாட்டையும் நாட்டு மக்களையும் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும் என நம்புகிறேன் என மேலும் தெரிவித்தார். (4-8-6-30)



இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் சௌபாக்கியா நிகழ்வு கடந்த புதன்கிழமை அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதிய திட்டத்தில் இணைந்து 2020 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தகுதிபெற்ற 119 மாணவர்களில் எழுமாறாக 8 மாணவர்களிற்கு புலமைப்பரிசிலிற்கான காசோலை மற்றும் பரிசில் பொதிகள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டினுடைய வளங்கள் அந்நிய நாடுகளுக்கு விற்கப்படுகின்றன

## அரசிற்கு எதிராக போராட மாக்சிச லெனினிசக் கட்சி அழைப்பு

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்துக்கு எதிராக மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் இன்று இடம்பெற உள்ளதாக புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் தலைவர் சி.க.செந்தில்வேல் தெரிவித்தார்.**

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே சி.க.செந்தில்வேல் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது நாட்டில் உள்ள அரசியல் நிலைமையானது மக்களுக்கு விரோதமான செயற்பாடாகவும் மக்களுக்கு எதிரான செயலாகவும் காணப்படுகின்றதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஒன்றரை வருடங்களுக்கு முன்பு புதிய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தபோது இலட்சக்கணக்கான வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி ஆகிவிட்டேன் என்று பெருமிதம் கொள்ளப்பட்டது. அதை தொடர்ந்து வந்த பாராளுமன்ற தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினை தாங்கள் பெற்று விட்டோம். மக்களுடைய ஆதரவினை முழுமையாக பெற்று விட்டோம் என சொன்னார்கள்.

20 ஆவது திருத்தச் சட்டத்தினை கொண்டு வந்து இந்த நாட்டிலே ஒரு தனிநபர் சர்வாதிகாரம் தனிக்கட்சியினுடைய சர்வாதிகாரமாக ஒரு குடும்பத்தினுடைய சர்வாதிகாரமாக இந்த நாட்டிலே அரசியலை மேற்கொண்டு வருகின்றார்கள்.

மக்களினுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நாம் குரல் கொடுப்பதற்கு தயாராகி வருகின்றோம். எமது நாட்டு வளங்கள் அந்நிய நாடுகளுக்கு விற்கப்படுகின்றன.

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வினால் சாதாரண உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள். வல்லரசுகளின் ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்து காணப்படுகின்றன. இன்றைய தினம் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொதுமக்களுடன் இணைந்து அரசாங்கத்திற்கு எதிரான குரலை கொடுக்க உள்ளோம் என அவர் தெரிவித்தார். (4-8-6-33)

# நூலக நிறுவன கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நூலக நிறுவனத்தின் 8 ஆவது இணையவழி கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை அன்று இரவு 7.30 மணிக்கு "இலங்கையின் ஆரம்பகால படைப்புக்களை ஆவணப்படுத்தல்" எனும் தலைப்பில் இணையவழியில் இடம்பெறும்.

நூலக ஆளுகைச் சபை உறுப்பினர் கோபிநாத் தில்லைநாதனின் ஒருங்கிணைப்பில் இடம்பெறும் நிகழ்வில் ஞானம் பாலச்சந்திரன் "ஆவணமே அத்திபாரம்" - 18,19 ஆம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் நூல்களை ஒட்டிய பார்வை எனும் தலைப்பிலும் சரவணன் நடராசாவின் ஆவணப்படுத்லூடாகக் காலனித்துவ வரலாற்றை மீள் கண்டு பிடித்தல் எனும் தலைப்பில் கலந்துரையாடவுள்ளனர்.
Zoom Meeting ID : 814 1558 4070 / Pass code: 891979 . (4-8)

# கலைமாணி, விஞ்ஞானமாணி கற்கை நெறிக்கான நுண்ணறிவு பரீட்சைகள் அடுத்த வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலைமாணி (மொழிபெயர்புக் கற்கைகள்) மற்றும் உடற்கல்வி விஞ்ஞானமாணி ஆகிய கற்கை நெறிகளுக்காக 2020/2021 ஆம் கல்வி ஆண்டில் பயில்வதற்காக விண்ணப்பித்த மாணவர்களுக்கான நுண்ணறிவுப் பரீட்சைகளை அடுத்த வாரம் முதல் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.


கலைமாணி (மொழிபெயர்புக் கற்கைகள்) தெரிவுக்கான நுண்ணறிவுப் பரீட்சை எதிர்வரும் ஜூலை 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் உடற்கல்வி, விஞ்ஞானமாணி ஆகிய கற்கைநெறி தெரிவுக்கான நுண்ணறிவுப் பரீட்சை எதிர்வரும் 16 ஆம் திகதி, வெள்ளிக்கிழமையும் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தெரிவுப் பரீட்சைக்குத் தகுதி பெற்றுள்ளவர்களின் விபரங்களை www.jfn.ac.lk என்ற இணையத்தள முகவரியில் பார்வையிட முடியும். தெரிவுப் பரீட்சைக்குத் தகுதி பெற்று, விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியவர்கள், தங்களது விண்ணப்பக் கட்டணம் செலுத்தியமைக்கான வங்கிச் சிட்டையை மின்னஞ்சல் மூலமாக அனுமதிகள் கிளைக்கு அனுப்பி வைக்குமாறும், கட்டணம் செலுத்தியமையை உறுதிப்படுத்தத் தவறுபவர்களுக்குப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்படமாட்டாது எனவும் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-8-6-33)

# யாழ்.மத்திய கல்லூரி உயர்தர மாணவர்களுக்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.உ/த , பரீட்சைக்கு 2 ஆம் தடவையாக பாடசாலை மூலம் தோற்ற இருக்கும் மாணவர்களை அடையாள அட்டையுடன் நாளை மறுதினம் 12 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு யாழ்.மத்திய கல்லூரி அதிபர் கலாநிதி எஸ்.கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (4-8)



தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு நேற்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கொவிட்-19 தடுப்பூசி செலுத்தப்பட்டது. (படம்:- சுபேசன்)

# வாள்முனையில் அச்சுறுத்தல் பருத்தித்துறை அல்வாயில் பரபரப்பு

## பொலிஸிலும் முறைப்பாடு

(கரணவாய்)

பட்டப்பகல் வேளை முகமூடி அணிந்த நால்வர் வாள்களுடன் வந்து தம்மை அச்சுறுத்தியதாக அல்வாய் பகுதியைச் சேர்ந்த ஒருவர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் அல்வாய் நாவலடி சந்திக்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றில் இலக்கத்தகடுகள் அற்ற 2 மோட்டார் சைக்கிளில் வாள்களுடன் சென்ற நால்வர் தன்னை அச்சுறுத்திச்சென்றுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலங்களில் யாழ்.மாவட்டத்தில் தொடர்ச்சியாக வாள்வெட்டுச் சம்பவங்கள் நடைபெற்று வரும் நிலையில் பகல்வேளை முகமூடியுடன் இலக்கத் தகடு இல்லாத மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்களால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (4-8-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிப்பு

(கொழும்பு)

**டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பணியகம் தெரிவித்தது.**

கடந்த மூன்று வாரங்களில், வாரம் ஒன்றிற்கு 700 நோயாளர்கள் என்ற அடிப்படையில் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் சமூக வைத்திய நிபுணர் ஹிமாலி ஹேரத் குறிப்பிட்டார்.

பருவப்பெயர்ச்சி மாற்றம் ஏற்படுகின்ற காலப்பகுதியில் ஒவ்வொரு வருடமும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய, தற்போது பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என வைத்திய நிபுணர் ஹிமாலி ஹேரத் எச்சரிக்கை விடுத்தார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 9,361 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அவர்களில் அதிகளவானவர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாகவும் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்தது. (நி-5)

# பைசர் தடுப்பூசி பெறாதவர்களுக்கு அனுமதி மறுக்கும் சில நாடுகள்

(கொழும்பு)

உயர் கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் சுமார் 1,000 மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசிகளை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

சில நாடுகள் பைசர் தடுப்பூசிகளைப் பெறாதவர்களை தங்கள் நாட்டுக்குள் நுழைய அனுமதி மறுக்கின்றது.

இதனால் உயர் கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் ஏராளமான மாணவர்களிடமிருந்து, தமக்கு பைசர் தடுப்பூசியை போடுமாறு கோரிக்கைகள் எழுந்துள்ளதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டார். (நி-5)

# மகிந்த-ரணில் முக்கிய சந்திப்பு



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எம்.பியுமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் முக்கியமான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இராப்போசனத்துடன் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், பிரதமரின் பாரியாரும் கலந்து கொண்டிருந்தார். இதன்போது பல முக்கியமான விடயங்கள் குறித்து இருவரும் கலந்துரையாடினர் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

# கைதுகளில் அரசியல் நோக்கம் எதுவுமில்லை - சரத் வீரசேகர



(கொழும்பு)

ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் ஒடுக்குகின்றனர் என்ற குற்றச்சாட்டை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத்வீரசேகர நிராகரித்துள்ளார்.

மேலும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வெளியிட்ட சுகாதார வழிகாட்டுதல்களை தொடர்ந்தே ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார தேவைகளிற்காகவே கைதுகள் இடம்பெறுகின்றன. அரசியல் நோக்கங்களிற்காக இல்லை எனவும் எச்சரித்தார்..

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் காலத்திற்கு காலம்சுகாதார வழிகாட்டுதல்களை வெளியிட்டு வருகின்றார்,

சில நாட்களிற்கு முன்னர் புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டு ஆர்ப்பாட்டங்களை தடை செய்தார்.

இந்த உத்தரவுக்கு அமையவே கைதுகள் இடம்பெறுவதாகவும், பொலிஸார் மீது எந்த குற்றமும் இல்லை எனவும் அமைச்சர் விளக்கினார். (நி-5)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 22செவ் 11 சூரி12 இல்<br>தகைமை/தொழில்: சுவிஸ் PR இல்லை<br>எதிர்பார்ப்பு: PR உள்ள வெளிநாட்டுப் பெண். வலதுகாலில் முழுங்காலுக்குக் கீழ் செயற்கைகால்"<br>தொ.இ: B/1917 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 33செவ் 7சூரி 5இல்<br>உயரம்:157cm<br>தகைமை/தொழில்:. குடும்பநல உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:வெளிநாட்டுவரன் எதிர்பார்க்கப்படுகிறது.<br>தொ.இ:G/5407 |
| பிறப்பு:1985 இந்து நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 40 ¼செவ் 2 சூரி 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:டுபாய்யில் மேற்பார்வையாளர்<br>எதிர்பார்ப்பு: மணமகனை விட 2 வயது குறைவாக இருத்தல் நன்று.<br>தொ.இ: B/1927 | பிறப்பு:1978இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>கி.பா:33செவ் 5 சூரி12 ல்<br>தகைமை/தொழில்: ஆண்டு -08<br>எதிர்பார்ப்பு:இந்தியவம்சாவழி என்றாலும் பறவாயில்லை. மணமகள் வளர்ப்பு மகள்<br>தொ.இ:G/5416 |
| பிறப்பு:1977 இந்து<br>நட்சத்திரம்:பூராடம்<br>கி.பா:24 செவ் 8 சூரி9 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: BSC, அரச அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி.தொழில் அவசியமில்லை<br>தொ.இ: B/1952 | பிறப்பு: 1988இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 53செவ்11 சூரி5 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: உப தபாலதிபர்<br>எதிர்பார்ப்பு: அரசாங்க உத்தியோகம்<br>தொ.இ:G/5424 |
| பிறப்பு:1985 இந்து நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 20 செவ்.சூரி 10 இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:களஞ்சியப் பொறுப்பாளர் (டுபாய்)<br>எதிர்பார்ப்பு:A/Lபடித்தபெண்<br>தொ.இ: B/2011 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி.பா:75 செவ் 3 சூரி4 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: பொறியிலாளர்<br>எதிர்பார்ப்பு:உள்நாடு. வெளிநாடு. படித்த மணமகன்<br>தொ.இ:G/5429 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



## கடைகள் வாடகைக்கு

யாழ்.வைத்தியசாலை வீதியில் 1ம் மாடியில் கடைகள் வாடகைக்குண்டு. அலுவலகத்திற்கும் ஏற்றது.

தொடர்புகளுக்கு
**077 765 1826**

(7138)



## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகத்தை நடாத்துவதற்கு யாழ்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 26.07.2021 ஆம் திகதி மு.ப.10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| சித்த மருத்துவ அலகு உணவகம் | கைதடி, யாழ்ப்பாணம். |

மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணமாக ரூபா 2000/= உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= உம் தனிதனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 162-1001-60000-880 இற்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளைக்கு நேரடியாகவோ தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல. 021222 6716) பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (C-7138) 10.07.2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறங்குதுறை, வெளிச்சவீடு எதுவும் இல்லை

# கிராஞ்சி கடற்றொழிலாளர்கள் பாதிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தின் கிராஞ்சி பகுதியில் தொழிலில் ஈடுபட்டு வரும் கடற்றொழிலாளர்கள் இறங்கு துறை மற்றும் வெளிச்ச வீடு இன்மை மற்றும் கடலட்டை பண்ணைகள் என்பவற்றால் தங்களுடைய தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளனர்.**



கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராஞ்சி பிரதேசத்தில் 200 இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக இந்தப் பிரதேசத்தில் உள்ள கடற் றொழிலாளர்கள் சிறுகடல் தொழில் மற்றும் ஆழ்கடல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தங்களுடைய கடற்றொழில் படகுகளை நிறுத்தி வைப்பதற்கும் படகுகளை நிறுத்தி வைப்பதற்கும் படகுகளை தொழிலுக்கு கொண்டு சென்று கரை சேர்ப்பதற்கும் ஏற்ற வகையில் இறங்கு துறைகள் இல்லாத நிலையே காணப்படுகின்றது. இதனால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வ்தாக தெரிவித்தனர்

அத்துடன் தங்களுடைய பிரதேசங்களிலே அட்டை தொழில் வளர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அட்டை பண்ணைகள் பல சிறுகடல் பகுதிகளில் போக்குவரத்து பாதைகளில் காணப்படுகின்றன. இதனால் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்தனர். (4-8-6-315)

# கற்குவாரிகளினால் 11 மில்லியன் ரூபாய் வருமானம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் இயங்குகின்ற இரு கற்குவாரிகளினால் 11 மில்லியன் ரூபாய் நிதி புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு வருமானமாக கிடைத்துள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இ.சத்தியசீலன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச சபை அமர்விலேயே இத்தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

இரு கற்குவாரிகளும் பிரதேச சபைக்கு வரி செலுத்தாமல் தமது செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்தனர்.

பிரதேச சபையின் வருமான அதிகாரியினால் இவ்விடயம் அவதானிக்கப்பட்டு 11 மில்லியன் ரூபாய் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு வருமானமாக கிடைத்துள்ளது. (4-8-6-350)

# பூநகரி பிரதேச சபையால் வீதிகள் புனரமைப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட மூன்று வீதிகள் நிரந்தர வீதிகளாக அமைக்கப்பட்டு வருகின்றன என பூநகரி பிரதேச சபை உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் (RIDEP) மூலமாக உலக வங்கியின் நிதியீட்டத்தின் மூலம் மூன்று வீதிகளும் புனரமைக்கப்படுகின்றன.

நீண்டகாலமாக மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக பூநகரி பிரதேச சபையால் இவ் வீதிகள் புனரமைக்கப்படுகின்றன. இவ்வீதிகள் புனரமைக்கப்படும் போது மக்களின் போக்குவரத்து இலகுவாக அமையும் எனவும் தெரிவித்தார். (4-8-5-6-350)

# இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பாள்புரம் பகுதியில் சட்டவிரோத இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மல்லாவி புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த இடத்திற்குச் சென்ற அதிரடிப்படையினர் சட்ட விரோத இடியன் துப்பாக்கியை பறிமுதல் செய்ததுடன் வைத்திருந்த நபரையும் கைது செய்து மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (4-8-6-281)



# கள்ளப்பாடு வாள்வெட்டுடன் தொடர்புடைய 6 பேருக்குப் பிணை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கள்ளப்பாட்டுப் பகுதியில் கடந்த 27 ஆம் திகதி வீடு ஒன்றுக்குள் நுழைந்த கும்பல் ஒன்று, வீட்டில் இருந்தவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியதுடன், வாகனங்கள் இரண்டு மீது தாக்குதல் நடத்தி ஒரு வாகனத்துக்கு தீ வைத்துவிட்டு தப்பிச் சென்றிருந்தது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸாரால் நவாலியில் வைத்து கடந்த 7 ஆம் திகதி ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் மேலும் ஐவர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த ஆறு சந்தேக நபர்களும் முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதை தொடர்ந்து அவர்களிடம் விசாரணைக்களை மேற்கொண்ட பின்னர் நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது குறித்த ஆறு பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு குறித்த வழக்கு விசாரணைகள் 2021.11.02 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது. (4-8-6-281)

# வவுனியாவில் கத்திக்குத்து குடும்பஸ்தர் படுகாயம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு வவுனியா பெரியார்குளம் பகுதியில் இடம்பெற்றது. குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு மகாறம்பைக்குளம் பகுதியில் இருந்து பெரியார்குளம் நோக்கி முச்சக்கரவண்டியை ஓட்டிச்சென்றிருந்தார்.

இதன்போது பெரியார்குளம் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் குறித்த சாரதியை கத்தியால் கடுமையாக தாக்கியுள்ளார். இதனால் படுகாயமடைந்த அவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில், தாக்குதலை மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படும் நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.(நி-8-6-299)

# ஆலய குருக்கள் உட்பட இருவருக்கு தொற்று

(பனிக்கன்குளம்)

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி ஒட்டுசுட்டான் கமநல சேவை, நிலையத்தில் ஒன்றுகூடிய 15 பேருக்கு கடந்த 7 ஆம் திகதி அன்று பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் அதன் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகியது.

இதில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இருவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

அதில் பழம்பாசி பகுதியினைச் சேர்ந்த ஒருவருக்கும் ஒட்டுசுட்டான் ஆலய குருக்கள் ஒருவருக்குமே தொற்று இருப்பதாக தெரியவந்துள்ளதை தொடர்ந்து அவர்கள் கொரோனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

மேலும் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (4-8-6-281)



வவுனியா, கூமாங்குளம் பகுதியில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு வீடு ஒன்று கையளிக்கப்பட்டது. நம் தாயகம் நிறுவனத்தின் உரிமையாளரின் நிதி உதவியில் குறித்த வீடு கட்டப்பட்டு கையளிக்கப்பட்டது.

(படம்:-வசந்தரூபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

10.07.2021
ஆனி 26, சனிக்கிழமை
அமாவாசை காலை 7.06 மணிவரை
புனர்பூசம் பின்னிரவு 1.43 மணிவரை
சுபநேரம் 2.58-4.28 மணிவரை
இராகுகாலம் 8.58-10.28 மணிவரை
சந்திராஷ்டமம்: கேட்டை, மூலம்

வளவன்


மேஷம்

ஆதாயம் தரும் வேலையென்றில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.


ரிஷபம்

வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புதிய முயற்சி யொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும்.


மிதுனம்

எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கௌரவமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


கடகம்

பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.


சிம்மம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், சிறப்பான நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.


கன்னி

அரை குறையாக இருந்த பணிகளை செய்து முடிப்பீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், திறமைகள் வெளிப்படும் நாள்.


துலாம்

விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், எதிர்பாராத சில சம்பவங்கள் நடைபெறலாம், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


விருச்சிகம்

எதையும் யோசித்துச் செய்வது நல்லது, குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, குடும்பத்தினரிடையே விட்டுக் கொடுத்து நடக்க வேண்டிய நாள்.


தனுசு

அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், ஆனந்தமான நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மகரம்

நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.


கும்பம்

பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மீனம்

மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், போசன சுகமுண்டு, வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

மாபெரும் எண்ணங்கள் இதயத்திலிருந்து வருகின்றன

# நீர்ப்பாசன வாய்க்கால்கள் சீரின்மை
## 420 ஏக்கரில் 210 ஏக்கர் மாத்திரமே சிறுபோகம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு கோட்டை கட்டிய குளத்தின் கீழ் உள்ள சுமார் 420 ஏக்கர் விவசாய நில்ங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யும் நீர்ப்பாசன வாய்க்கால்கள், விவசாய வீதிகள், கழிவு வாய்க்கால்கள் என்பவற்றை புனரமைத்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள கோட்டை கட்டிய குளத்தின் கீழ் உள்ள 420 ஏக்கர் நிலப்பரப்பில் 120 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் விவசாய நிலங்களுக்கான நீர் விநியோகத்தை மேற்கொள்கின்ற நீர்ப்பாசனக் கால்வாய்கள் நீண்ட காலம் புனரமைக்கப்படாமல் சேதமடைந்து காணப்படுகின்றன. இதனால் பெருமளவான நீர் வீண் விரயமாகி வருகின்றது.

இவ்வாண்டு குளத்தில் போதியளவு நீர் இருந்த போதும் 210 ஏக்கர் நிலப்பரப்பில் மாத்திரமே சிறுபோகம் மேற்கொள்ள முடிந்தது. காரணம் வாய்க்கால்கள் புனரமைக்கப்படாமையால் நீர்ப்பாசனத்தின் போது நீர் விரயமாகுதலாகும்.

மேற்படி நீர் விநியோக வாய்க் கால்கள் புனரமைக்கப்படும் போது கூடுதலான நிலப்பரப் பில் சிறுபோக செய்கையை மேற்கொள்ள முடியும் என்றும் விவசாயிகள் சுட்டிக் காட்டினர். (4-6-315)

# அனுமதியற்ற வியாபார நிலையங்கள்
# நேற்று அகற்றப்பட்டன



(நெளுக்குளம்)

வவுனியா தாண்டிக்குளம் ஏ-9 வீதிக்கரையில் அமைக்கப்பட்டிருந்த அனுமதியற்ற வியாபார நிலையங்கள் நேற்று அகற்றப்பட்டன.

குறித்த பகுதியில் ஏ-9 வீதி மற்றும் தொடரூந்து பாதைக்கு அருகாமையில் உள்ள பகுதிகளில் சிலரால் தற்காலிக கொட்டில்கள் அமைக்கப்பட்டு வியாபார செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதுடன் சுற்று வேலிகளும் அமைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் நேற்று காலை குறித்த பகுதிக்குச்சென்ற வவுனியா பிரதேசசெயலாளர் நா.கமலதாசன் தலைமையிலான குழுவினர் குறித்த பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அனுமதியற்ற விபாபார நிலையங்களை அகற்றியதுடன், சுற்று வேலிகளையும் அகற்றிச்சென்றனர்.

குறித்த பகுதி சௌபாக்கியா தேசிய வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-8-6-299)

# அடங்க மறுக்கும் யானைகள்



(கண்டாவளை)

கிளிநொச்சி கல்மடு பிரதேசத்தில் நேற்று முன் தினம் காட்டு யானைகள் புகுந்து தென்னை மரங்கள் மற்றும் நெற் செய்கைகளையும் அழித்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடு நகர் மற்றும் நாவல் நகர் ராங்கன் குடியிருப்பு போன்ற பகுதிகளில் தொடரும் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் தாங்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் பழையமுறிகண்டி பகுதியில் காட்டு யானை புகுந்து வீடு ஒன்றும் சேதமாக்கப்பட்டுள்ளது. (4-6-315)



முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் "துரு மிதுரு நவ ரட்டக்" திட்டதின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 3800 தென்னை நாற்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

(படம்:-யதுபாஸ்கரன்)

# மன்னாரிற்கு பைசர்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நேற்றைய தினம் வெள்ளிக் கிழமை காலை 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு "பைசர்" (Pfizer) கொரோனா தடுப் பூசி செலுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டது. மன்னார் மாவட்டத்தில் உள்ள கரையோர பிரதேசங்களில் உள்ள அபாயம் கூடிய கிராமங்கள் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமை வழங்கப்பட்டு குறித்த கிராமங்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்படுட்டது. (4-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஹெய்ட்டி ஜனாதிபதி படுகொலை; 28 கொலையாளிகள் அடையாளம்



(ஹெய்ட்டி)
வெளிநாட்டில் பயிற்சி பெற்ற 28 கொலையாளிகளைக் கொண்ட ஒரு குழு இந்த வார தொடக்கத்தில் ஹெய்ட்டி ஜனாதிபதி ஜோவெனல் மோஸை படுகொலை செய்ததாக அந் நாட்டு பொலிஸார் கூறியுள்ளனர்.

அவர்களில் 26 பேர் கொலம்பியர்கள், மற்றைய இருவர் ஹெய்ட்டி வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்கர்கள் என பொலிஸ் தலைவர் லியோன் சார்லஸ் செய்தியாளர்களிடம் கூறினார்.

சந்தேக நபர்களில் 8 பேரை இன்னும் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் இரண்டு அமெரிக்கர்கள் உட்பட 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீதமுள்ள சந்தேக நபர்கள் தலைநகர் போர்ட்-ஓ-பிரின் ஸில் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

## ஆப்கானிஸ்தானி ஓகஸ்ட் 31 ஆம் தி

**(வோஷிங்டன்)**
**ஆப்கானிஸ்தானின் எதிர்காலத் அந்நாட்டு தலைவர்கள் ஒன்றிை களை எடுக்க வேண்டும் என்றும் னில் 20 ஆண்டு காலப் போர் ஓ திகதியுடன் முடிவுக்கு வரும் என பிடன் தெரிவித்துள்ளார்.**

டோஹாவில் அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தலிபான்களுக்கும் அமெரிக்காவுக்கும் உடன்பாடு ஏற்பட்டது. ஆப்கான் அரசுடன் தலிபான்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும், ஆப்கானிலிருந்து வெளியேறும் அமெரிக்கப் படை மீது தாக்குதல் நடத்தக் கூடாது என்பன உள்ளிட்ட முடிவுகள் எட்டப்

இந்நிலையில், அமெரிக் திரும்பப் பெறப்படும் என ஜோ பிடன் தெரிவித்தார். இ வெள்ளை மாளிகையின் கூறியதாவது,

ஆப்கானில் தேசத் மைக்கும் பணிக்காக அ

## சிகா வைரஸின் ஆதிக்கம் கேரளாவிலும் தொடங்கியது


(டில்லி)
கேரளாவில் கொரோனா ஏற்படுத்திய பாதிப்புகளே இன்னும் மறையாமல் இருக்கும் நிலையில், சிகா வைரஸும் தலைகாட்டி இருப்பது மாநில அரசுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

குமரி மாவட்ட எல்லையை ஒட்டியுள்ள கேரளாவை சேர்ந்த 24 வயது கர்ப்பிணி ஒருவருக்கு உடல் முழுவதும் சிவப்பு புள்ளிகள் ஏற்பட்டு அங்குள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். கடந்த மாதம் 28 ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட அவருக்கு கடந்த 7 ஆம் திகதி குழந்தையும் பிறந்தது.

தொடர்ந்து அவதிப்பட்டு வந்த அந்த பெண்ணின் இரத்த மாதிரிகள் புனேயில் உள்ள வைரஸ் ஆய்வு நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பரிசோதனையில் அவருக்கு சிகா வைரஸ் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது.

இதன்மூலம் கேரளாவில் இந்த தொற்று முதன் முதலாக கண்டறியப்பட்டு இருக்கிறது. இதை மாநில சுகாதார அமைச்சர் வீணா ஜார்ஜ் நேற்று முன்தினம் தெரிவித்தார். (8)

**உலகளவில் கொரோனா**
**உயிரிழப்பு :- 4 031 460**
**தொற்று :- 186 597 199**
**(நேற்றைய மாலை நிலவரம்)**




### பயணக்கட்டுப்பாட்டை தளர்த்தும் விடயத்தில்
## அவசர தீர்மானம் கூடாது
### உலக சுகாதார ஸ்தாபனம்

(ஜெனிவா)
உலக நாடுகளுக்கு பாரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ள கொவிட் பரவலை கட்டுப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பில் ஒவ்வொரு நாடும் கூடுதல் கவனம் செலுத்த வேண் டும் என உலக சுகாதார ஸ்தாப னம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பயணக்கட்டுப்பாடுகளை தளர்த்தும்போது உலக நாடுகள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொரோனா அவசர கால திட்டத்தின் தலைவர் மைக்ரி யான் தெரிவித்தார்.

அமெரிக்காவில் வாரந் தோறும் மில்லியன் கணக் கான கொவிட் தொற்றாளர்கள் கண்டறியப்படுகின்றனர்.

அதேபோன்று ஐரோப்பா வில் அதிக எண்ணிக் கையிலான தொற்றாளர்கள் பதிவாகின்றனர்.

எனவே பயணக்கட்டுப் பாட்டை தளர்த்துவது தொடர் பில் உலக நாடுகள் அவசரப்படக் கூடாது என அவர் தெரிவித்தார். (8)

## பங்களாதேஷ் தொழிற்சாலை தீ விபத்து


### • 3 பேர் பலி
### • 20 பேர் காயம்

(டாக்கா)
பங்களாதேஷில் உள்ள ஒரு தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர். மேலும் 20 பேர் காயமடைந்தனர். அத்துடன் மேலும் சிலர் தொழிற்சாலைக்குள் சிக்கியிருக்கலாம் என அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

டாக்காவிலிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நாராயங்கஞ்சில் நேற்று முன்தினம் இரவு பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலையின் தரை தளத்தில் தீவிபத்து ஏற்பட்டது.

சம்பவ இடத்தில் இரண்டு பேர் இறந்தனர். மற்றொருவர் காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தார்.

தீ வேகமாகப் பரவியதை அடுத்து உயிர் தப்புவதற்காக கட்டடத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது மாடியில் இருந்து குதித்தவர்களே காயமடைந்ததாக தீயணைப்பு துறை அதிகாரி ஒருவர் கூறினார். (8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ில் 20 ஆண்டு காலப் போர் ...திகதியுடன் முடிவுக்கு வரும்

...லத்தை மேம்படுத்த
...ிணைந்து முயற்சி
...ம் ஆப்கானி ஸ்தா
... ஓகஸ்ட் 31 ஆம்
...ன ஜனாதிபதி ஜோ



...எட்டப்பட்டன.
...மெரிக்கப் படை
... என ஜனாதிபதி
...ார். இது குறித்து
...யின் ஜோ பிடன்

...சத்தைக் கட்ட
...ாக அமெரிக்க

இராணுவம் அங்கு செல்லவில்லை. அந்த நாட்டின் எதிர்காலத்தை மேம்படுத்த ஆப்கான் தலைவர்கள் ஒன்றிணைந்து முயற்சிகளை எடுக்க வேண்டும். மேலும் ஆயிரக்கணக்கான அமெரிக்கர்களை ஆபத்தில் சிக்க வைக்க அமெரிக்கா விரும்பவில்லை.

தலிபான்களை நம்பவில்லை என்ற போதும், ஆப்கான் அரசை காக்கும் திறன் அந்நாட்டு இராணுவத்துக்கு உள்ளது என்ற நம்பிக்கை உள்ளது. எனவே, ஆப்கானில் அமெரிக்க இராணுவ நடவடிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் 31 ஆம் திகதியுடன் முழுமையாக முடிவுக்கு வந்துவிடும் என்றார். (8)

...வண்
...ம் தாப
... கால
...யான்

...ாறும்
...ாவிட்
...கின்ற

... வில்
...லான
...ர்.
...ட்டை
...உகை
... என
(8)

# டோக்கியோ நகரில் அவசரகாலநிலை பிரகடனம்



(டோக்கியோ)

ஜப்பானின் டோக்கியோ நகரில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

டோக்கியோவில் கொவிட்-19 பரவல் தீவிரமடைந்ததை அடுத்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அவசர நிலை காரணமாக மதுபானசாலைகள் மற்றும் உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், அங்கு சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக கடைபிடிக்கப்படவுள்ளதாக ஜப்பான் பிரதமர் தெரிவித்தார். (8)

# மணிப்பூரில் நிலநடுக்கம்

(டில்லி)

மணிப்பூரில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டது.

வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான மணிப்பூரில் நேற்று காலை மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என தேசிய புவியியல் மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.5 ஆக பதிவாகியுள்ளது.

கடந்த சில நாட்களாகவே வடகிழக்கு மாநிலங்களில் தொடர்ந்து நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (8)

# 69 தலிபான்கள் கொன்று குவிப்பு; முக்கிய நகரத்தை மீட்ட உள்நாட்டுப் படைகள்



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் மேற்கு பகுதியில், பத்கிஸ் மாகாணத்தில் அமைந்துள்ள முக்கிய நகரமான காலா இ நாவ் நகரத்துக்குள் தலிபான் பயங்கரவாதிகள் கடந்த புதன்கிழமை நுழைந்து அந்த நகரத்தை கைப்பற்றினர்.

இது நேட்டோ படைகள் அங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர் விரைவான முன்னேற்றத்தை தொடர்வதில் தலிபான்கள் தீவிரம் காட்டியதன் விளைவு ஆகும். ஆனால் அங்கு தலிபான் பயங்கரவாதிகள் மீது உள்நாட்டுப் படைகள் தொடர்ந்து தீவிர தாக்குதல் நடத்தி, அந்த நகரத்தை அதிரடியாக மீட்டன. இந்த தாக்குதலில் 69 தலிபான் பயங்கரவாதிகளை உள்நாட்டு படைகள் கொன்று குவித்துள்ளன. 23 பேர் படுகாயம் அடைந்தனர். தலிபான் பயங்கரவாதிகளின் ஏராளமான ஆயுதங்களையும் ஆப்கானிஸ்தான் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# அமெரிக்காவில் நில நடுக்கம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நெவாடாவின் எல்லைக்கு அருகே வடக்கு கலிபோர்னியாவின் மலைப்பிரதேசத்தில் 5.9 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

கலிபோர்னியாவின் வாக்கர் நகருக்கு அருகே இந்த நிலநடுக்கத்தின் மையப் பகுதி உள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து கிழக்கு சியரா நெவாடா பகுதியில் சிறிய அதிர்வுகள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8)



# சுவீடனில் விமான விபத்து



(ஸ்டாக்ஹோம்)

சுவீடனில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட விமான விபத்தில் விமானி உட்பட 9 பேர் பலியாகினர்.

சுவீடன் ஒரேப்ரோ நகரில் விமானி உட்பட 9 பேருடன் சிறிய ரக விமானம் சென்று கொண்டிருந்தது.

நேற்று முன்தினம் இரவு 7 மணி யளவில் ஒரேப்ரோ விமான நிலையம் அருகே வந்தபோது எதிர்பாராத வித மாக கட்டுப்பாட்டை இழந்து தரையில் விழுந்து அடுத்த சில விநாடிகளில் தீ பற்றி எரிந்தது.

விபத்தில், விமானத்தில் பயணம் செய்த விமானி மற்றும் 8 ஸ்கை- டைவிங் வீரர்கள் என 9 பேரும் உயிரிழந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மீட்புக் குழுவினர் உயிரிழந்தோரின் உடல்களை கைப் பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்துக்கான காரணம் குறித்தும் விசாரணை மேற் கொள்ளப்பட்டு வருகிறது. (8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல துறைகளிலும் இராணுவமயம்

## -பாராளுமன்றில் சாணக்கியன்-

(கொழும்பு)

**இலங்கையில் சகல துறை களும் இராணுவ மயமாக்க லுக்கு உட்படுத்தப்பட்டு வருவ தைப்போல நாட்டின் உயர் கல் வியும் இன்று இராணுவமய மாக்கலுக்கு உள்ளாக்கப்பட் டிருப்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலம் மீதான விவாதம் நடை பெற்றது.

இதன்போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் இரா சமாணிக்கம் சாணக்கியன், இலங்கையில் 30 வருடப் போர் இடம்பெற்றமைக்கும் உயர் கல்வியில் ஏற்பட்ட நிராகரிப் புக்களே காரணம் எனத் தெரி வித்தார்.

1948 ஆம் ஆண்டில் இரு ந்து பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும் கூட கல்வித் துறையில் ஏற்பட்ட தலையீடு கள் காரணமாகவே எமது தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலைக்கு தள்ளப்பட் டனர்.

கல்வி என்பது ஒரு நாட்டின் முக்கியமான துறையாகும். இது சகலரையும் பிரதிநிதித் துவப்படுத்தும் ஒன்றாகும். அவ் வாறு இருக்கையில் சகல துறை களிலும் இன்று இராணுவ மய மாக்கல் இடம்பெற்று வருகின் றது. கொவிட் கட்டுப்பாட்டு நிலை மைகளாக இருந்தாலும், சட்டம் ஒழுங்கு அமைச்சும் இராணு வத்தின் மூலமாகவே நிர்வ கிக்கப்படுகின்றது.

இன்று கொண்டுவந்துள்ள சட்டமூலம், உயர் கல்வி அமைச் சிற்கு கீழ் வரவில்லை, மாறாக பாதுகாப்பு அமைச்சருக்கு கீழேயே கொண்டுவரப்படுகின் றது.

எனினும் தேரர்களுக்கு உரு வாக்கப்பட்ட பல்கலைக்கழகம் கூட பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழுவிற்கு கீழ் உள்ளதென்றால் இராணுவ பல்கலைக்கழகமும் அவ்வாறே கொண்டுவரப்பட வேண்டும்.

தேசிய பாதுகாப்பு குறித்த கொள்கை என்னவென்பது சக லரும் தெரிந்துகொள்ள வேண் டும். இப்போதும் இராணுவ கொள்கைக்கு கீழ் சிவில் மாணவர்களுக்கும் கற்பிக்கவே முயற்சிக்கப்படுகின்றது.

எனவே இராணுவ மயமாக் கலை கைவிட்டு மாணவர் களுக்கான கல்வியை வழங் கும் நடவடிக்கைகளை, இலகு கடன் உதவிகளைப் பெற்றுக் கொடுத்து கல்வியை ஊக்குவிக் கும் நடவடிக்கைகளை முன் னெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# 2019 இல் சு.கவின் ஆதரவின்றி ஆட்சி மாற்றம் ஏற்பட்டிராது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பொதுஜன பெரமுனவிற்கு ஆத ரவு வழங்காமலிருந்திருந்தால் 2019 ஆம் ஆண்டு ஜனாதி பதித் தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்காது.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் கடந்த கால த்தை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும் என ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற கட்சியின் செயற்குழு கூட்டத்தை தொடர்ந்து ஊட கங்களுக்கு கருத்துத்துரைக் கையில் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

பற்றிக் கைத்தறி மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சினை இரா ஜினாமா செய்ய தயாராக உள் ளேன். இத்தீர்மானத்தை சுதந் திரக் கட்சியின் தலைவர் மற்றும் செயற்குழு கூட்டத்திலும் குறிப் பிட்டுள்ளேன். பதவி விலகு மாறு அவர்கள் பணித்தால் நிச்சயம் பதவி விலகுவேன்.

2019 ஆம் ஆண்டு ஸ்ரீல ங்கா சுதந்திரக்கட்சி இடம்பெற்று முடிந்த ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களில் ஸ்ரீல ங்கா பொதுஜன பெரமுனவிற்கு ஆதரவு வழங்காமல் இருந்தி ருந்தால் இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஆட்சியதிகாரத்தில் இருந்திருக்க மாட்டார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சியை விமர்சிக்கும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம உள்ளிட்டோர் கடந்த கால த்தை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். சுதந்திரக் கட்சியை புறக்கணிக்க நினை ப்பது பாரிய அரசியல் துரோ கமாகவே கருதப்படும் என தயாசிறி தெரிவித்தார். (நி-5)

# டென்மார்க்கிலிருந்து இலங்கைக்கு மருத்துவ உபகரணங்கள் நன்கொடை

(கொழும்பு)

டென்மார்க்கிலிருந்து தடுப் பூசிகள் உள்ளடங்கலாக ஒரு தொகை மருந்துவ உபகராங் கள் நாட்டிற்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

தடுப்பூசி பொதிகள் 10 உள் ளிட்ட மருத்துவ உபகரணங் கள் நேற்று கிடைக்கப்பெற்றன.

உலக சுகாதார ஸ்தாபனத் தின் கொவெக்ஸ் திட்டத்தின் அடிப்படையில் குறித்த மருத்துவ உபகரணங்கள் நன்கொடை யாக வழங்கப்பட்டுள்ளன. (நி-5)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2349

### சானு

காதல் வலிதான் பெரிய வலின்னு சொல்லிட்டு இருக்கிறவங்க....



கதவுக்கு இடையில கையை விட்டுப் பாருங்க அப்போ தெரியும்

### டருஜன்

ஏன்டா அடுத்தவன கலாய்ச்சா சிரிக்கிற, நீ சேர்ந்து கலாய்க்கிற, ஆனா உன்ன கலாய்ச்சா மட்டும் பயங்கரமா டென்ஷன் ஆகுற?



உனக்கு வந்தா ரத்தம் அடுத்தவங்களுக்கு வந்தா அது தக்காளி சட்னியா?

### கனிவிழி



கல்யாணம் ஆனவனுக்கு அடி விழுதேன்னு கவலை கல்யாணம் ஆகாதவனுக்கு முடி விழுதேன்னு கவலை

### தனாதிபன்



"எனக்கு சுகர் இல்லையாம்" யார் சொன்னா? டாக்டரா, நேர்ஸா? ரேஷன் கடையில...!

### சாரு


எப்புடித்தான் ஓடிப் போயி கல்யாணம் எல்லாம் பண்ணுறாங்களோ?



எனக்கெல்லாம் எந்திருச்சி போய் Fan போடவே சோம்பேறித்தனமா இருக்கு

### தர்மிலன்

இன்று நான் பார்க்கும் உலகம் தன் இனம் அழிவதே தெரியாமல் அதை புகைப்படம் எடுப்பதில் முண்டியடித்துக் கொண்டிருக்கிறது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கான நிவாரணங்கள் விரைவில் வழங்கப்படும்

## நிதியமைச்சர் பசில்

**(கொழும்பு)**

**நாட்டு மக்களின் நலனை கருத்திற்கொண்டு நிவாரணங்களை விரைவாக வழங்க ஜனாதிபதி ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் பெல்லன்வில விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.



நாட்டின் முழு பொருளாதாரத்தையும் கருத்திற் கொண்டு ஜனாதிபதி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

நாட்டை பொருளாதார ரீதியில் மீளக் கட்டியெழுப்ப கடினமாக பாடுபட வேண்டியுள்ளது. அதன் பிரதிபலன் விரைவில் கிடைக்கப் பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# துணை கொறடாவாக சாகர காரியவசம்

(கொழும்பு)

ஆளும் கட்சியின் துணை கொறடா பதவிக்கு நியமிக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி சாகர காரியவசம் அதற்கான நியமனக் கடிதத்தை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்து நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வைத்து பெற்றுக் கொண்டார்.

இதற்கு முன்னதாக ஆளும் கட்சியின் துணைக் கொறடாவாக பதவி வகித்த ஜயந்த கெட்டகொட தனது பாராளுமன்ற உறுப்பினர்



பதவியை இராஜினாமா செய்ததை தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் வகையில் சட்டத்தரணி சாகர காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார். (நி-5)

# உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் சாத்தியம்

(கொழும்பு)

எதிர்வரும் வாரங்களில் கோதுமை மா தயாரிப்பிலான உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படவுள்ளதாக வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு விலைகள் அதிகரிக்கும் பட்சத்தில் அதற்கான மாற்று வழிகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதன் ஒருகட்டமாக அதிகுறைந்த விலையில் நூடில்ஸ், தேங்காய் எண்ணெய் போன்றவற்றை சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-5)

# அலிசப்ரி பதவி விலக வேண்டும்


## ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டின் நன்மைக்காகவன்றி எதிரிகளின் நன்மைக்காக செயற்பட்ட விடயத்தை பொறுப்பேற்றுக் கொண்டு இலங்கை நீதியமைச்சர் பதவி விலக வேண்டுமென, ஹெல பொது சவிய அமைப்பின் உறுப்பினர் ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சர் அலி சப்ரியினால் முன்வைக்கப்பட்ட 2019 கொரோனா வைரஸ் விசேட ஏற்பாடுகள் சட்ட மூலமானது அரசியல் அமைப்பிற்கு முரணானது என உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பினால், நாட்டிற்கு ஏற்படவிருந்த மிகப் பெரிய பாதிப்பு தடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்தி



ப்பில் பங்கேற்று கருத்து வெளியிடுகையில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நமக்குத் தெரியவில்லை!

ஒரு உயரமான மரம். அந்த மரத்தின் உச்சியிலே ஒரு பறவை கூடு கட்டியிருந்தது. அது என்ன பறவையென்றால்... ராஜாளிப் பறவை! அந்தக் கூட்டிலே அது முட்டை இட்டிருந்தது.

ஒரு குரங்கு அந்த மரத்துக் கிளையிலே தாவித்தாவி குதித்துக்கொண்டு இருந்தது. அப்போது அந்த கூட்டிலே இருந்த முட்டை அது கண்ணிலே பட்டது... சும்மா இருக்குமா? விளையாட்டாக ஒரு முட்டையை எடுத்தது.

மரத்தை விட்டு கீழே இறங்கியது! கீழே ஒரு கோழி சில முட்டைகளை இட்டு வைத்திருந்தது. குரங்கு தன் கையிலே இருந்த ராஜாளிப் பறவை முட்டையை அந்த கோழி முட்டைகளோடு போட்டுவிட்டு போய்விட்டது.

கோழி வந்தது... பார்த்தது... அதற்கு ஒன்றும் வித்தியாசம் தெரியவில்லை...தன்னுடைய முட்டைகளோடு சேர்த்து அந்த முட்டையையும் அடைகாத்தது!

சிறிது நாட்களிலே குஞ்சுகள் பொரித்தன... எல்லாம் முட்டையிலிருந்து வெளி வந்தது.

ராஜாளிப் பறவையினுடைய குஞ்சு... அந்த கோழிக்குஞ்சுகளோடு சேர்ந்து வளர்ந்தது.

மற்ற கோழிக் குஞ்சுகள் போலவே இதுவும் குப்பைகளைக் கிளறி... புழு பூச்சிகளைச் சாப்பிட்டது...

காக்கைகள் தாக்கிறதிற்கு வந்தால்... மற்ற கோழிக்குஞ்சுகள் போலவே இதுவும் பயந்துபோய் தாய்க் கோழியின் சிறகுகளுக்குள்ளே வந்து ஒளிந்சிருக்கும்.

இப்படி... சிறிது காலம் போனது.

சில சேவல்களாக ஆனது...சில கோழிகளானது.

அந்த ஒன்று மட்டும் ராஜாளியாக ஆனது.

ஆனால் ஒரு விடயம்...

தான் ஒரு ராஜாளி என்பது அந்தப் பறவைக்கு தெரியாது.

தன்னையும் ஒரு கோழி என்று தான் அது நினைத்துக்கொண்டிருந்தது! அப்படி நினைத்துக்கொண்டு குப்பை மேட்டைக் கிளறிக்கொண்டு இருக்கும்!

ஒரு நாள் மாலை நேரம்.

இந்த ராஜாளிப் பறவை கீழே அது பாட்டுக்கு வழக்கம்போல குப்பையைக் கிளறிக்கொண்டிருந்தது.

அப்போது அண்ணார்ந்து பார்த்தது...

வனத்திலே... உயரத்திலே... கூட்டமாக ராஜாளிப் பறவைகள் உல்லாசமாக வட்டமடித்துக் பறந்துகொண்டிருந்தது. அதை இது பார்த்தது...

இதற்கு மனசுக்குள்ளே ஏக்கமாக போனது...

அப்போது இதற்கு ஆண்டவன் மேலே கோபம் வந்தது.

''ஆண்டவனுக்கு என் மேலே ஏன் ஓரவஞ்சனை? என்னையும் ஒரு ராஜாளியாக படைத்திருந்தால்... நானும் கூட இந்நேரம்... ஆகாயத்திலே உல்லாசமாக பறந்துகொண்டு இருந்திருப்பேன்'' என்று நினைத்து வருத்தப்பட்டது.

இது வேடிக்கையாக இருக்கவில்லை?

ஒருவகையிலே பார்த்தால் நாம் கூட இந்த ராஜாளிப் பறவை மாதிரி தான் வாழ்ந்துக்கொண்டு இருக்கின்றோம் என்கிறார் உளவியல் நிபுணர் எம். ஸ்காட்பெக்.

நம்மால் எவ்வளவு வேலை செய்ய முடியும் என்று நாம் நினைத்துக் கொண்டு இருக்கின்றோமோ அதைவிடப் பலமடங்கு வேகமாக செய்ய முடியும் என்கிறார் அவர்.

நம்முடைய முழுமையான பலம் என்ன என்பது நமக்கே தெரியவதில்லை.

ஒரு ஆள் இருந்தான்...

அவனுக்குக் கோழியைக் கண்டால் பயம்...

ஏன்னென்றால் அவனுக்கு மனதிற்குள் தான் புழு என்று நினைப்பு.

புழுவைக்கண்டால் கோழி கொத்துமல்லோ?

அதனால் கோழி எதிரில் வந்தால் இவன் நடுங்க ஆரம்பித்திடுவான்.

ஒரு மனநோய் டாக்டரிடம் போனான். தன்னுடைய பிரச்சினையை சொன்னான்.

அவர் இவனை தங்க வைத்து ஒரு வாரம் வைத்தியம் செய்தான். அதற்குப்பிறகு இவனைப்பார்த்து...

"இனி நீ வீட்டுக்கு போகலாம்... நல்லா ஞாபகம் வைத்துக்கொள்... இனி நீ புழு" இல்லை... மனிதன். தைரியமாக புறப்படு... போயிட்டு வா என்று சொல்லி வழியனுப்பி வைத்தார்.

அவன் புறப்பட்டுப் போனான். பாதிவழி போயிருப்பான். எதிரிலே ஒரு கோழி வந்துகொண்டு இருந்தது... அவ்வளவு தான்.

உடம்பு நடுங்க ஆரம்பித்தது... திரும்பி ஓடிவந்தான். டாக்டர் கேட்டார்... "ஏன் திரும்பி ஓடி வந்திட்டாய்?" என்று.

"எதிரிலே ஒரு கோழி வந்துகொண்டு இருந்தது" என்றான்.

நான் தான் சொன்னேனே... நீ புழு இல்லை... மனிதன். நீ புழு இல்லை என்பது இன்னும் உனக்குப் புரியவில்லையா? என்றார் டாக்டர்.

"நான் புழு இல்லை என்பது எனக்குத் தெரியும் டாக்டர்... இது அந்த கோழிக்குத் தெரியுமா? என்பது தெரியவில்லையே" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

23



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

அக்கோரிக்கை 500 ஏக்கருக்கும் அதிகமாக இருக்கும் போது அது ஒப்புதலுக்காக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். காணி அமைச்சு மற்றும் அமைச்சரவை ஆகிய இரண்டிடமிருந்தும் ஒப்புதல் பெறப்படும் போது, விடுவிப்புச் சான்றிதழ் காணி அமைச்சரால் வழங்கப்படும். அதன் பின் காணி ஆணையாளர், அரச அதிபர்கள் மூலம் மாகாண சபைக்கு காணியைவிடுவிப்பார். **(Circular 02/232 of 16-11-1989 issued by Secretary of the Ministry of Lands> Irrigation and Mahaweli Development)**

எனவே மாகாணங்கள் விரும்பியபடி அரச காணிகளை அபகரிக்கும் என்ற அச்சம் நிராகரிக்கப்படுகிறது அல்லது அரசு காணிகளை விடுவிக்கும் செயல் முறையைக்கருதும் போது குறைந்த பட்சம் அவ் அச்சம் திருப்திகரமாக நீர்த்துப் போகின்றது. இந்த நடவடிக்கையில் ஈடுபடும் அதிகாரிகள் அனைவரும மத்திய அரசினால் நிர்வகிக்கப்படுகிறார்கள், எனவே அவரகள் மத்திய அரசுக்கு விசுவாசமாக இருப்பார்கள். எனவே இதில் அச்சம் கொள்ளத் தேவையில்லை. அண்மையில் (ஒக்டோபர் 2011) அமைச்சரவை தீர்மானித்த படி, அரச அதிகாரிகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்குவதன் மூலம் காணிநிர்வாகத்தை தேசிய காணிஆணைக் குழுவலுப்படுத்த முடியும். இதனை தேசிய காணி ஆணைக் குழு ஏற்றுக் கொண்டால். இந்த கடந்த கால செயல் முறைகள் கற்றல் அனுபவங்களாக இருக்கலாம்.

10) மாகாண சபைகள் காணி விவகாரங்களை வெவ்வேறு வழிகளில் நிர்வகித்துவருவதால், காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு பல முக்கியமான சட்டங்களின் கீழ் (அச்சட்டங்களாவன 1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கமற்றும் 1989 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க காணி அபிவிருத்திச்சட்டம், 1947 ஆம்ஆண்டின் 67 ஆம் இலக்க அரச காணிகள் கட்டளைச் சட்டம், 1979 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காணி அன்பளிப்பு (மானியங்கள்) (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் 58 ஆம்இலக்க (திருத்தப்பட்ட) அரசகாணிகள் (மீட்பு உடைமை) ஆகும்). மாகாண சபைகளுக்கு காணி சம்பந்தமான பணிகளை மாற்றுவதற்கான செயற்பாட்டு நிலையை தெளிவுபடுத்தியது. இச்சட்டங்கள் இப்போது வரை அரசாங்கத்தின் தேவைகளை கவனித்துவருகின்றன (தேவைக்கேற்பதிருத்தங்களுடன்) **(Circular 02/233 of 1-12- 1989 issued by Secretary of the Ministry of Lands> Irrigation and Mahaweli Development) மேலும் பிம்சவிய திட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் இவை மேம்படுத்தப்பட்டுள்ளன. (Circular 2011/BIM/1 of 19-5-2011 issued by the Land Commissioner General.)**

11) காந்திய இயக்கம் போன்ற செயற்பாடுகளால் புலிகள் அரச காணிகளை மக்கள் ஆக்கிரமிப்பதை ஊக்கிவித்தது போன்ற அனுபவங்கள் இருந்ததால், தமிழ் அரசியல்வாதிகளும் அரசகாணிகளை ஆக்கிரமிப்பதை ஊக்குவிப்பார்கள் என்று தெற்கு அரசியல்வாதிகளின் மனதில் பெரும் அச்சம் உள்ளது. மேலும் இந்தப் பயம் கூட நியாயப்படுத்தப்படலாம். அரச காணிகளை ஆக்கிரமிக்கும் பிரச்சினை 1983 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க அத்துமீறல் குடியேற்ற (ஆக்கிரமிப்புகளை) ஒழுங்கு படுத்துதல் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் மாகாணசபைகள் அத்தகைய ஒழுங்கு முறைக்கு காணி ஆணையாளர் மற்றும் காணி அமைச்சின் (மீண்டும் மத்திய அதிகாரிகள்) மூலம் ஒப்புதல் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. **(Circular 02/233 of 1-12- 1989 issued by Secretary of the Ministry of Lands> Irrigation and Mahaveli Development)**. இதற்குப் பயம் இருந்தால் அல்லது தெளிவான புரிதல் அடையும் வரை தேசிய காணி ஆணைக்குழுவினால் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் வழிகாட்டல் நூலில் ஒப்புதலின்படிகளை இறுக்கமாகத் தீர்மானிக்கலாம்.

12) அரசியலமைப்பு தேவைகளுக்கு ஏற்ப, மாகாண நீர்ப்பாசனம் மற்றும் காணி அபிவிருத்தித்திட்டங்களைத் தவிர மற்ற அனைத்து அரச காணிகளும் மாகாண சபைகளால் நிர்வகிக்க வேண்டும் என்று காணி அமைச்சு உத்தரவிட்டிருந்தது. மாவட்ட அளவில் மற்றைய அரச காணிகளில் அரச அதிபர்கள் முடிவெடுக்கும் அதிகாரத்தை வைத்திருந்தார்கள். இச்செய்முறை வடிவத்தில் காணி அமைச்சுக்கு மாற்று அதிகாரமாக தேசிய காணி ஆணைக் குழுவின் பொறிமுறையை எதிர்காலத்தில் பயன்படுத்தப்படலாம்.

13) மாகாண சபைகள் பகிர்ந்தளிப்பதற்கு தேவையான அரசகாணிகளை அரசிடம் இருந்து விடுவிப்பதற்கு காணி அமைச்சின் அறிவுறுத்தல்களின் படி, மேலே பந்தி (9) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயல்முறையின் படி நடவடிக்கை எடுக்க முடியும். இச் செயல் முறை அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கிறது, மாகாணங்களுக்கு அல்ல. மேலும் மாகாண நீர்ப்பாசனம் மற்றும் காணி அபிவிருத்தியின் கீழ்வராத கிராம நீர்ப்பாசன புனரமைப்புத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட சிறிய குளங்களின் கீழ் வரும் காணிகளை பகிர்ந்தளிப்பது மாகாண சபைகளால் செய்யப்பட வேண்டும் என்று திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது. குறைந்த பட்சம் இந்த அதிகாரமாவது மாகாணங்களுக்கு வழங்கப்படாமல் இருந்தால், 13 ஆவது திருத்தத்தில் எது பகிரங்கமாக பகிரப்படுகிறது அல்லது பகிர்ந்தளிக்கப்படுகிறது?

14) நாட்டில் நிலவிய மோதல் சூழ்நிலை காரணமாக அரச அதிபர்கள் அல்லது மாகாண காணி ஆணையாளர்கள் மூலம் செய்யப்பட வேண்டிய அலுவல்கள் குறித்த ஆவணங்களை வைத்திருப்பது குறித்து அமைச்சு எச்சரிக்கையாக இருந்தது. இது போரின் வெற்றியின் பின்னர் தற்போது மதிப்பாய்வு செய்யப்படலாம்.

15) 13ஆவது திருத்தத்தின் பின்னிணைப்பு**II** (பிரிவு 3) இன் கீழ், தேசிய காணி ஆணைக் குழுவை நிறுவுவது தொடர்பாக மிக முக்கியமான ஏற்பாட்டைச் செய்தது. இந்த முன் மொழிவு தெற்கு அரசியல்வாதிகள் மத்தியில் பல முடக்கு வாதங்களை (knee-jerk) உருவாக்கியுள்ளது. அரசியலமைப்பின்படி 1987 க்குப் பிறகு தேசிய காணி ஆணைக் குழு எந்த அரசாங்கத்தாலும் நியமிக்கப்படவில்லை. இதற்கு பல காரணங்கள் இருக்கலாம், இருப்பினும் பின்னிணைப்பு **II** ன் படி அதன் நியமனம் அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளால் செய்யப்பட வேண்டும் என்பதும் மாகாண சபைகள்,தேசிய காணி ஆணைக்குழு வகுத்த தேசியக் கொள்கையைப் பொறுத்தவரையில் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதும் தெளிவாகத் தெரியும்.

தேசிய காணி ஆணைக் குழுவை நியமிக்காததற்கான காரணம் பின்வருமாறு கருதப்படுகிறது:

(a) தேசிய கொள்கை வகுத்தல் என்பது ஒரு ஆணைக் குழுவின் கைகளில் இருக்கக் கூடாது, ஆனால் உச்ச (supreme) அமைச்சரவையில் இருக்க வேண்டும் என்ற நடைமுறையில் உள்ள எண்ணம், இது போன்ற கொள்கை வகுப்புகள் அமைச்சரவையில் உள்ள 'மத்திய' அரசியல்வாதிகளின் அதிகாரங்களையும் அதிகாரத்தையும் மறுக்கும் என்ற எண்ணம் என்பவையாகும். எவ்வாறாயினும், 13 ஆவது திருத்தம், அரசியலமைப்பின் பிரிவு 33 (d) (இது 20ஆவது திருத்தத்தில் 33(f) ஆகும்) மற்றும் பின்னிணைப்பு **II**- பிரிவு 3 இன் கீழ்நிரல் **II** இன் முன்னுரையின் கீழ் தேசிய கொள்கை உருவாக்கம் அரசாங்கத்தால் முழுமையாக கட்டுப்படுத்தப்படுகிறது.

(b) எண்ணிக்கையில் தேசிய கர்ணி ஆணைக் குழு உறுப்பினர்கள் எட்டு (கட்டுரை எழுதும் போது வடக்கு-கிழக்கு இணைந்திருந்தது) மாகாணசபைகளுக்கும் மிகவும் சார்புடையவராக இருப்பார்கள், எனவே மாகாணசபைகள் காணிப் பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்திற்கு ஆணையிடலாம் என்ற அச்சம். ஆனால் 1992 ஆம்ஆண்டு ஜூலை 21 ஆம் திகதி தேசியகாணி ஆணைக் குழு மசோதா பாராளுமன்றத் தில் சமர்ப்பிக்கப்பட்ட போது, வரைவு மசோதாவின் பிரிவு 3 இன் கீழ் 19 உறுப்பினர்களுக்கு ஏற்பாடு செய்வதன் மூலம் இந்த அச்சம் அழிக்கப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்துவரும் நாட்களில் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிக்கும்

## —காரணத்தை வெளியிட்டார் உபுல்—

(கொழும்பு)

அடுத்து வரும் சில நாட்களில் நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரிக்கக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக கடந்த சில நாட்களாக மாதிரிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாத நிலையில், பெருமளவான மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தப் பட வேண்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாகவே தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## பெருமை மிகுந்த பிரதோஷம்



மகா பிரதோஷம்

சிவபெருமான் விஷம் உண்ட தினம் கார்த்திகை மாதம் திரயோதசி திதி ஆகும். எனவே சனிக்கிழமையும் திரயோதசி திதியும் சேர்ந்து வருகின்ற பிரதோஷம் மகாபிரதோஷம் ஆகும். மாசி மாதம் வரும் மகா சிவராத்திரிக்கு முன்னர் வரும் பிரதோஷமும், மகா பிரதோஷம் எனப்படும். அன்று சிவதலங்களில் வழிபாடு செய்வது சிறப்பானது.

சனிப்பிரதோஷ வழிபாடு செய்தால் ஐந்து வருடம் தினமும் ஆலயம் சென்ற பலன் கிட்டும். மேலும் பஞ்சமா பாதகங்களினால் ஏற்படும் பாவங்களைத் துடைத்து நன்னெறி அடைய சனி மகாபிரதோஷம் துணைபுரியும்.

### ஐந்துவகை பிரதோஷம்

பிரதோஷங்கள் ஐந்து வகைப்படும். அவை, நித்திய பிரதோஷம், பஷப் பிரதோஷம், மாதப் பிர தோஷம், மகாப்பிரதோஷம், பிரளப் பிரதோஷம்.

தினமும் சூரிய அஸ்தமனத்திற்கு மூன்று நாழிகைகள் முன்னர் நட்சத் திரங்கள் உதயமாகும்வரை உள்ள நேரம் நித்திய பிரதோஷமாகும். சுக்கிலபட்ச சதுர்த்தி மாலைக் காலம் பஷப்பிரதோஷம் எனப்படும். கிருஷ்ணபட்ச திரயோதசி சனிக்கிழமை வந்தால் அதுவே மகாப் பிரதோஷம் எனப்படும். பிரளய காலத்தில் எல்லாம் சிவனிடம் ஒடுங்கும். அதுவே பிரளயப் பிரதோஷமாகும்.

### இழந்த பதவியை திரும்பப்பெற

பிரதோஷ விரதம் இருப்பவர்களுக்கு சிவனருள் விரைவில் கிடைக்கும் என்பதற்கு கந்தபுராணத்தில் கூறப் பட் டுள்ள ஒரு தகவல்,

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை ஆண்ட மன்னன் எதிரிகளரால் கொல்லப்பட்டான். அவனது நாடு எதிரிகள் வசமானது. எதிரிகளால் கொல்லப் பட்ட மன்னனின் மனைவி தனது மகன்கள் சசிவரதன், தர்மகுப்தன் ஆகியோரை அழைத்துக் கொண்டு சாண்டில்ய முனிவரிடம் தஞ்சம் புகுந்தார். முனிவரின் அறிவுரைப்படி அந்தப் பெண்ணும் சிறுவர்களும் பிரதோஷ விரதத்தைக் கடைப்பிடித்தனர். நான்கு மாதங்கள் கழிந்து எட் டாவது பிரதோஷத்தின் போது சசி வரதன் அமிர்தகலசத்தைப் பெற்று அமிர்தத்தைப் பருகினான். இளவர சன் தர்ம குப்தன் ஒரு தேவ கன்னியை மணந்து அந்தத் தேவ மன்னனின் துணையுடன் தனது எதிரிகளைத் தோற்கடித்து தனது ஆட்சியைத் திரும்பப் பெற்றான்.

**ஸ்ரீ நந்தீஸ்வரர் காயத்திரி**

ஓம் தத்புருஷாய வித்மஹே
சக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி ப்ரசோதயாத்

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய மேலும் 266 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மேலும் 266 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 48 ஆயிரத்து 808 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் சுமார் 41 ஆயிரம் நபர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மீதமுள்ள நபர்கள் மீது வழக்குகள் எதிர்காலத்தில் பதிவு செய்யப்படும் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (நி-5)

## விவசாயத் திணைக்களத்தின் இரு அதிகாரிகள் கைது

(கொழும்பு)

விவசாயத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரும், ஆலோசகர் ஒருவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு இந்தோனேஷியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகை உலர்ந்த பாக்குகளுக்கு போலி தனிமைப்படுத்தல் சான்றிதழ்களை வழங்கிய குற்றச்சாட்டுக்காகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இலங்கை சுங்கப் பிரிவினர் குற்றப் புலனாய்வுப் பிரிவில் அளித்த முறைப்பாட்டுக்கு அமைவாகவே இந்த கைது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)

## கதிர்காமம் ஆடிவேல் திருவிழா ஆரம்பம்

(கொழும்பு)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமக்கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகிறது. இம்முறை ஆடிவேல் உற்சவம் மக்கள் பங்களிப்பின்றி நடைபெறும் . (நி-5)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 250 | 200 |
| தக்காளி | 100 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 40 |
| கோவா | 160 | 180 | 180 | 200 |
| கரட் | 140 | 160 | 180 | 180 |
| பூசணி | 80 | 70 | 60 | 120 |
| புடோல் | 100 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 250 | 260 | 340 | 300 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 300 | 200 | 280 | 400 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 180 | 160 |
| பயற்றங்காய் | 150 | 170 | 100 | 120 |
| லீக்ஸ் | 200 | 160 | 180 | 200 |
| பீற்றூட் | 100 | 120 | 120 | 150 |
| கறிமிளகாய் | 160 | 200 | 250 | 280 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 400 | 300 |
| போஞ்சி | 160 | 180 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 60 | 40 |
| தேசிக்காய் | 180 | 135 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 200 | -- | 320 | -- |
| வெங்காயப்பூ | 250 | 240 | 160 | 320 |
| முள்ளங்கி | 120 | 150 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 30 |
| வல்லாரை | 20 | 60 | 110 | 30 |
| ஈரப்பலா | 60 | 100 | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ராஜாவும் முட்டாள் குரங்கும்



வேதபுரி என்ற நாட்டை அரசர் ஒருவர் ஆண்டு வந்தார். அவர் தனக்கு பரிசாக கிடைத்த குரங்கு ஒன்றை ஆசையா வளர்த்து வந்தார். அந்த குரங்கும் அந்த அரசரின் மீது மிகவும் பாசமாக இருந்தது.

ஒரு நாள் ராஜா வழக்கம் போல அரண்மனைத் தோட்டத்தில் உலாவப் போகும் பொழுது குரங்கையும் கூடவே அழைத்துச் சென்றார்.

செல்லும் வழியில் ஒரு முட்புதர்க்கு நடுவில் பாம்பு ஒன்று இருப்பதை குரங்கு கவனித்தது. உடனே அந்த குரங்கு தாவி குதிச்சு பாம்பு இருப்பதை ராஜாவிடம் காண் பித்தது. அந்த பாம்பு ராஜாவைக் கடிக்கும் முன்பு குரங்கு பாம்பிடம் சண்டையிட்டு பாம்பைக் கொன்றது.

சரியான சமயத்தில் ராஜா, பாம்புக் கடியிலிருந்து தப்பித்தார். குரங்கின் எச்சரிக்கை உணர்வையும், விசுவாசத்தையும் பார்த்து ராஜா மிகவும் நெகிழ்ந்தார்.

உடனே, அந்தக் குரங்கையே தன்னோட பாதுகாவலரா நியமிக்க முடிவு செய்தார். அவரோட இந்த முடிவைக் கேட்ட மந்திரிகள் அனைவரும் திகைத்து நின்றனர்.

அவர்கள் ராஜாவிடம், 'ராஜா என்னதான் இருந்தாலும் அது ஒரு விலங்குதானே! அதுக்கு மனிதர்கள் மாதிரி பகுத்தறிவோ, முடிவெடுக்கும் திறமையோ இருக்காதே! உங்களோட இந்த விபரீத எண்ணத்தை மாத்திக்குங்க" ன்னு எவ்வளவோ சொல்லிப் பார்த்தாங்க. ராஜா கேட்கறதா இல்லை.

'என்னைப் பொறுத்தவரைக்கும் ஒரு அந்தரங்கப் பாதுகாவலனுக்கு இருக்க வேண்டிய முக்கியமான தகுதி பாசமும், விசுவாசமும்தான்! அது என் குரங்குகிட்ட நிறையவே இருக்கு! அதனால் என் பாதுகாவலுக்கு மனிதர்கள் வேண்டாம் குரங்கே போதும் என்று தீர்மானமா சொல்லிட்டாரு. (தொடரும்)

# மகாபாரதம்




மேலும் அவர் கூறுகிறார். ஒருவன் ஒரு கொடிய காட்டை அடைந்தான். அங்கு சிங்கம், புலி முதலிய கொடிய விலங்குகள் அவனைத் துரத்தின.

அவன் தப்பித்து ஓடினான். ஓட ஓட ஒரு புலி அவனை துரத்தியது. விரைந்து அவன் ஒரு மரத்தின் மீது ஏறும் போது தவறிப் பாழுங் கிணற்றில் வீழ்ந்தான்.

பாதிக் கிணற்றில் கொடிகளைப் பற்றிக் கொண்டு தலை கீழாகத் தொங்கினான். கிணற்றுக்கடியில் இருந்த கரும்பாம்பு சீறியது.

கிணற்றுக்கருகில் இரண்டு முகமும் ஆறு கொம்புகளும் பன்னிரெண்டு கால்களும் உடைய யானை ஒன்று பயங்கரமாகச் சுற்றித் திரிந்தது. ஆதரவாகப் பிடித்துக் கொண்டிருந்த கொடிகளை கறுப்பும், வெள்ளையுமான இரண்டு எலிகள் கடித்துக் கொண்டிருக்கின்றன. அப்போது மரத்திலிருந்த தேன்கூட்டிலிருந்து தேன் சொட்டு சொட்டாக துளித் துளியாகச் சிந்தியது.

அவனோ தன்னைச் சூழ்ந்திருக்கும்.. புலி, பாழுங்கிணறு, யானை, பாம்பு,எலிகள் ஆகிய ஆபத்துகளை மறந்து சிந்தும் தேன் துளியைச் சுவைத்திருந்தான். அந்த ஆபத்திலும் உயிர் வாழ்க்கையை விரும்பினான் என்ற விதுரர் இந்த உருவகத்தை மேலும் விளக்கினார்.

மனிதன் சென்றடைந்த காடுதான் சம்சார வாழ்க்கை. நோய்கள் தாம் கொடிய விலங்குகள். துரத்தி வந்த புலிதான் யமன்.ஏற முயன்ற மரம் தான் முக்தி. நரகம் தான் பாழுங்கிணறு.

பற்றிப்பிடித்த கொடிகள் தாம் ஆசையும், பற்றும் யானையின் இரு முகங்கள் அயனங்கள் (தக்ஷிணாயணம், உத்தராயணம்). ஆறு கொம்புகள் ஆறு பருவங்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மனிதனின் தீய குணங்களைப் பித்தளைத் தட்டில் பொறிக்கிறோம். அவர்களின் நற்குணங்களை ஓடும் தண்ணீரில் எழுதுகிறோம்.

~ ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii.lk

## தமிழர்கள் இல்லையென்றால் பிக்குகளுக்கு ஏது மரியாதை

இலங்கையில் நடப்பதெல்லாம் காரண காரிய அரசியல் என்பதை முதலில் நாம் ஏற்றாக வேண்டும்.

இதற்கு நல்ல உதாரணம் இன்றைய ஆட்சிப்பீடம்.

ஆம், கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றி என்பது சிங்கள மக்களிடம் இருந்த தமிழின எதிர்ப்பின் விளைவாகும்.

சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாக வந்தால் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாகி விடுவர் என்பது ராஜபக்ஷ தரப்பின் பிரசாரமாக இருந்தது.

அவர்கள் முன்வைத்த பிரசாரத்தின் மெய்ப் பொருள் பற்றி ஆய்ந்தறிவதற்கு சிங்கள மக்கள் தயாராக இல்லை.

இதன்காரணமாக, அவர்கள் முன்வைத்த பிரசாரத்தை சிங்கள மக்கள் அப்படியே ஏற்றுக் கொண்டனர்.

ஆக, ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றதற்குப் பின்னால், அபிவிருத்திக் கொள்கைகளோ, உள்நாட்டு உற்பத்தியை உயர்த்துவதற்கான உத்தேசத் திட்டங்களோ, ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் காரியங்களோ இருக்கவில்லை.

மாறாக, தமிழ் மக்களை நசுக்கவல்ல தலைமை எதுவோ அதுவே நமக்குத் தேவை என்பது மட்டுமே சிங்கள மக்களின் நிலைப்பாடாயிற்று.

ஆக, சமகால ஆட்சிப்பீடம் என்பது ஒரு காரணத்தோடு அமைக்கப்பட்டது என்பதும் அந்தக் காரணம் என்ன என்பதும் இப்போது தெளிவாயிற்று.

இவை ஒருபுறமிருக்க, தற்போது நாடு மிகப் பெரும் பொருளாதார அவலத்தைச் சந்தித்து நிற்கிறது.

பொருளாதாரப் பெரு மந்தத்தை எங்ஙனம் ஈடுசெய்வது என்ற குழப்பத்தில் நிதியமைச்சுப் பதவியில் மட்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த மாற்றம்; அரசுக்கு எதிராகத் தென் பகுதியில் எழுந்த எதிர்ப்பை சமாளிப்பதற்கானதாக இருந்தாலும் அது பெரிதாக எதையும் சாதிக்கப் போவதில்லை என்பது திண் ணம்.

தவிர, பொருளாதாரம் சார்ந்து ஒரு கடுமையான வரிச்சுமை மக்கள் மீது ஏற்றப்படக்கூடிய வாய்ப்பு உண்டு என்பதை மட்டும் கூற முடியும்.

இதனை, நிதியமைச்சராகப் பதவியேற்றுக் கொண்ட பின்னர் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆற்றிய உரையில் இருந்து அனுமானிக்க முடியும்.

நிலைமை இதுவாக இருக்கையில், அரசுக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்.. இதில் பௌத்த பிக்குகளும் அடங்குவர்.

அதிலும் வேடிக்கை என்னவென்றால், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட புத்தபிக்கு ஒருவரை ஆட்டைத் தூக்குவதுபோல பொலிஸார் தூக்கி வந்த சம்பவமாகும்.

தமிழர்களுக்கு எதிராகக் கோசம் போடும் போது புத்தபிக்குகளை வணங்கி நிற்கின்ற பொலிஸார் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த புத்தபிக்குவை அலாக்காகத் தூக்கிச் சென்றனர் என்றால், அதன் பொருள் தமிழர்கள் இருக்கின்றபடியால்தான் பௌத்த பிக்குகளுக்கு சிங்களத் தரப்புகள் மரியாதை கொடுக்கின்றன.

இல்லையென்றால் அவர்களுக்கு என்ன நடக்கும் என்பதை வெளிப்படுத்துவதுதான் நேற்று முன்தினம் நடந்த சம்பவம் என்பதை அனைவரும் நன்கு புரிந்திருப்பர்.

## மதுபோதையில் சாரத்தியம் பேருந்து சாரதி கைது

### மன்னார் பகுதியில் சம்பவம்

(மன்னார்)

மன்னார் ஆடைத் தொழிற்சாலையில் இருந்து அங்கு கடமையாற்றும் பெண் பணியாளர்களை ஏற்றிக் கொண்டு சென்ற தனியார் பேருந்து சாரதி கடுமையான மது போதையில் குறித்த பேருந்தினை செலுத்திச் சென்ற நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை வீதிப் போக்குவரத்து பொலிஸார் குறித்த பேருந்தினை இடைமறித்ததோடு, அதன் சாரதியை கைது செய்துள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன், ஆண்டாங்குளம் மற்றும் வட்டக்கண்டல் ஆகிய கிராமங்களில் இருந்து ஆடைத்தொழிற்சாலைக்கு பணியாளர்களை ஏற்றி இறக்கும் பேருந்தின் சாரதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனால் ஏற்பட இருந்த பாரிய விபத்து தவிர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3,285)

## ஒட்டுசுட்டான் பகுதியில் மரக்கடத்தல் முறியடிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் கன்ரர் ரக வாகனத்தில் சட்டவிரோதமாக ஏற்றிச் செல்லப்பட்ட பலகைகள், தீராந்திகளை பொலிஸாரும் வனவளத் திணைக்கள அதிகாரிகளும் இணைந்து கைப்பற்றி உள்ளனர்.

நேற்று பி.ப 6 மணியளவில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பக்கம் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த கன்ரர் ரக வாகனத்தில் மறைக்கப்பட்டிருந்த மரப்பொருட்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் சந்தியிலேயே கன்ரர் ரக வாகனம் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்தும் ஒட்டுசுட்டான் பொலிஸார் மரக் கடத்தலுடன் தொடர்புடையவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளனர். (ம-3,350)

## குருவிக்காட்டுப் பகுதியில் கசிப்புக் குகை முற்றுகை

### இருவர் கைது

சாவகச்சேரி பொலிஸ் நிலைய மாவட்ட புலனாய்வு பிரிவு உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் சரசாலை -குருவிக்காட்டுப் பகுதியில் இடம்பெற்ற கசிப்பு உற்பத்தி முற்றுகையிடப்பட்டு இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் டாவின் தலைமையிலான பொலிஸ்குழுவினர் இக் கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது 20 லீற்றர் கசிப்பு, 820லீற்றர் கோடா, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய பரல்கள், ஹாஸ் சிலிண்டர் உள்ளிட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3,30)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 11 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** அரசடி, சாவகச்சேரி, மருதடி, ஆசிரியர் வீதி சந்தி, சாவகச்சேரி நகரம், பிரதேச செயலகம் சாவகச்சேரி, டச்சு வீதி, டச்சுவீதி கண்டுவில், கச்சாய் வீதி, கல்வயல் துர்க்கை அம்மன் கோவில் பிரதேசம், மீனாட்சிஅம்மன்கோவில் சங்கத்தானை, நுணாவில் பெருங்குளம் சந்தி, தபால் அலுவலகம் சந்தி, சாவகச்சேரி புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை, சாவகச்சேரி நீதி மன்ற வளாகம், ஏழாலை, கட்டுவன், கட்டுவன், கட்டுவன்புலம், குப்பிழான், மயிலங்காடு, சூறாவத்தை சுன்னாகம், புகையிரத நிலைய வீதி, மணியம் கடையடி, தோப்பு, டெலிகொம் சுன்னாகம், அரசடி பழம் வீதி சந்தி, கைலாசப்பிள்ளையார் கோவில், நல்லூர்கோவில், நாவலர் வீதி இராசாவின் தோட்டம், பருத்தித் துறை வீதி, றக்காவீதி சுண்டுக்குளி, றக்காவீதி கோயில் வீதிச் சந்தி, இராமநாதன் வீதி புகையிரத குறுக்கு சந்தி, பிரிட்டிஷ் கவுன்சில் றக்கா வீதி, விஞ்ஞான பீடம் தியாகி அறக்கொடை நிலையம், றியோ கிறீம் ஹவுஸ் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** முதலாவது குறுக்குத்தெரு, ஒஸ்ரியா ஸ்ரூடியோ, அறவந்துலாவ், பஜார்வீதி, ஹொரவப் பொத்தானை வீதி, இலுப்பையடிச் சந்தி, கந்தசாமி கோவில் வீதி, குகன் மோட்டார்கள், 2 ஆவது குறுக்குத்தெரு, மில் வீதி சந்தி, பொலிஸ் நிலையம், பஸார் வீதி, இறம்பைக்குளம், சூசைப்பிள்ளையார் குளம், ஹோட்டல்- ஓவியா, லங்கா அரிசி ஆலை, இராணி அரிசி ஆலை, எஸ்.வி.ஆர். அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி-5)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



### ஐந்து விடயம்கூடப் போதும்

❖ மனிதனுக்குள் புதைந்திருக்கும் பரிபூரணத்தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வியின் குறிக்கோள்.

❖ மன உறுதியும், அதை வெளிப்படுத்தும் விதமும், பயன்தரும் விதத்தில் மனஆற்றலை அமைப்பதும் பயிற்சிகள் கல்வியில் இடம்பெற வேண்டும்.

❖ வெறும் புள்ளிவிபரங்களைச் சேமிப்பதில் பயனில்லை. மனதை ஒருமுகப்படுத்துவதாக கல்வித்திட்டம் அமையவேண்டும்.

❖ மூளைக்குள் பல்வேறு விஷயங்களைத் திணித்து வைப்பதால் யாருக்கும் பயனில்லை. அவை ஜீரணமாகாமல் வாழ்நாளெல்லாம் தொந்தரவையே கொடுக்கும்.

❖ தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைத் தன் சொந்தக்கால்களில் நிற்கும்படி செய்வதில் தான் கல்வியின் உண்மையான வெற்றி இருக்கிறது.

❖ ஐந்தே ஐந்து உயர்ந்த கருத்துக்களைக் கிரகித்துக் கொண்டு அவற்றை வாழ்வில் சரிவரக், கடைபிடித்தால் கூட, கல்வி கற்ற பயன் ஒருவருக்கு கிடைத்துவிடும்.

❖ சிங்கம் போன்ற மன உறுதி, நல்ல ஒழுக்கம், பிறருக்கு உதவி புரியும் குணம் ஆகியவையே கல்வி பெற்றதன் அடையாளங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–313

## யாழ்.நகரில் குடும்பப் பண்ணையில் பாசுமதி நெல்லுற்பத்தி



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 326



**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

உணவுற்பத்தி பற்றி உலக உணவு மற்றும் விவசாய தாபனம் தொடங்கி அனைத்து நிறுவனங்களும் அதிகளவில் கரிசனை கொள்ளும் அவசரமான காலமாக தற்போதய நடப்பு நாட்களை நாம் கவனத்திற் கொள்ளலாம். கொரோனா வைரஸின் தாக்கம் அதீத தொற்றுதலாக பரிணமிக்கும் நிலை வருவதை நடப்பு நிகழ்வுகள் கட்டியங் கூறி நிற்கின்றன. மக்களாக நாம் பொறுப்புடன் நடந்துகொள்ளும் வரை இந்த வைரஸின் பரவலையும் அதனால் ஏற்படும் இழப்புகளையும் தவிர்க்க முடியாமலே போய்விடும்.

அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளை நாம் இயன்றளவிற்கு நடைமுறைப்படுத்துவதும் சுகாதராத்துறை மேற்கொள்ளும் நோய்த் தடுப்பு மற்றும் நோயெதிர்ப்பு முறைகளை அவசியம் கடைப்பிடிப்பதும் இன்னும் எமக்கான பாதுகாப்பினை நாமே முன்னின்று செய்வதும் மிகவும் முக்கியமானதாகும். இது எவரும் எதிர்பார்த்திராத இடர் காலம். அனைத்துலகுமே அங்கலாய்த்து விடை தெரியாது திகைத்திருக்கும் தருணங்கள். மருத்துவ உலகம் களைத்துவிட்டதாகவே உணர்கின்றோம். தினமும் கொரோனா நோயாளிகளுடன் காலத்தைக் கழிக்கும் வைத்தியர்கள், தாதிமார், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் குறிப்பாக அம்புலன்ஸ் வண்டியின் ஓட்டுனர்கள் எனப் பலரும் அயராது உழைத்து மக்களைக் காப்பாற்றும் செயற்பாடு மிகவும் போற்றுதற்குரியது. பலரது குடும்பங்களில் பல உயிர்களைக் கண்ணயராது பாதுகாத்து காப்பாற்றியதால் பலருக்கு வைத்தியர்கள் கடவுளாகவுள்ளனர்.

கொரோனா அச்சுறுத்தலில் மிகவும் அவதானமாக கையாள வேண்டிய விடயமாக உணவுற்பத்தி அமைந்துள்ளது. இவ்வருட இறுதியில் உணவுக்கு பஞ்சம் வரலாம் என்ற செய்தி மிகவும் உன்னிப்பாகவும் அவதானமாகவும் கருத்திலெடுக்க வேண்டும். உணவுற்பத்தி செய்பவனுக்கான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டாலன்றி உணவுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வது என்பது மிகவும் கடினமான காரியமாக இருக்கும். ஆதலினால் நாம் எமக்கான உணவு நாமே இயன்றளவிற்கு உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்துவது மிகவும் நல்லது.

நோயினால் நாம் எவரும் எதிர்பாராத உச்சத்திற்கு சென்றால் நாட்டை முழுமையாக முடக்க வேண்டியும் ஏற்பட்டால் உணவுற்பத்தியும் அதனது சந்தைப் படுத்தலும் மற்றும் மக்களுக்கு பகிர்ந்தளிப்பதும் என அனைத்திலும் அதீத கவனத்தை தற்போதிருந்தே செலுத்தினால் எந்த இடர் வந்தாலும் நாம் அதனை சமாளித்துக் கொள்ளலாம்.

அனைத்தையும் கவனத்திற் கொண்டு தற்போதைய ஆண்டினை உலக பழவகைகள் மற்றும் மரக்கறிப் பயிர்களுக்கான ஆண்டாக பிரகடனப்படுத்தியிருக்கின்றார்கள். இது கொரோனா காலத்தில் மக்களை விழிப்புடன் அவர்களுக்கு தேவையான சேதன உணவை தமது நிலப்பரப்பில் அவரவர் மனைகளில் உற்பத்தி செய்து உண்பதற்கான உந்துதலாகும்.

பயிர்கள், ஆடு, மாடு, கோழி, தாரா என குடும்பப் பண்ணையில் அ[illegible]த்தையும் வளர்த்து [illegible] சத்துணவை உற்பத்தி செய்து உண்ணும் கலாசாரத்திற்குள் கொரோனா கொண்டு வந்து விட்டிருப்பதனை இன்னமும் நாம் உணராமல் இருந்தால் வரப்போகும் நெருக்கடியை சமாளிக்க முடியாமலேயே போய்விடும். இந்த நிலையில் கிடைக்கின்ற நிலவசதியைப் பொறுத்து குடும்பப் பண்ணையை நாம் அமைத்துக் கொள்வதற்கான உதாரணங்கள் பல இருக்கின்றன.

ஆனாலும் யாழ்.நகரில் பொஸ்கோ பாடசாலைக் கருகில் அதிலுள்ள குளத்தின் எதிர்ப் புறத்தில் இருக்கின்ற குறுகிய நிலப்பரப்பில் தாவரங்கள் பல வளர்க்கப்படுகின்ற நிலையில் இப்போது பாசுமதி நெல்லினை வளர்த்துக் காட்டியிருக்கும் பாங்கினைப் பார்க்கும் போது இனி தானியப் பயிர்களை குறிப்பாக நெல்லினை வளர்க்க முடியும் என்னும் செய்தி அனைவருக்குமுரியதாகும்.

சகாயநாதன் என்பவரின் முழு முயற்சியின் அறுவடையாக அவரது குறுகிய நிலப்பரப்பில் மனைத் தோட்டத்தில் பாசுமதி நெல் விளைந்து அறுவடைக்கு தயாராகி இருப்பதனை பார்க்கும் போது எம்மவர்கள் எதை செய்ய முடியாதென்று விட்டு வைத்தார்கள்.

உந்துதலும் ஊக்கமும் இருந்தால் எம்மவர்கள் [illegible] பதனை இந்த சிறு உதாரணம் எடுத்துக் காட்டியிருக்கின்றது. தாவரங்களின் வகைகளை பாதுகாக்கும் திட்டத்திற்கு இது நல்லதொரு உதாரணம்.

வழக்கமாக நாம் பயிரிடும் நெல்லினமாக இல்லாமல் பாசுமதி நெல்லினை விதைத்து அதனை பக்குவமாக வளர்த்து தற்போது அறுவடைக்கு தயாராக்கியிருக்கும் நிலையைப் பாருங்கள்.

சகாயநாதனின் வீட்டில் காணப்படும் அனைத்து தாவரங்களும் உயிர்ப் பல்வகைமையை முழுமையாக கவனத்திலெடுத்து அதனது பயன்பாட்டை உணர்ந்து பல்வகைத் தாவரங்களை முறையாக சேதனப் பசளையை மட்டும் பயன்படுத்தியும் வீட்டிலுள்ள கழிவுகளை பசளைகளாக்கியும் வளர்க்கப்பட்டிருக்கின்றன.

இருக்கின்ற இடைவெளிகளிலெல்லாம் பயிர்களை வளர்த்திருக்கும் பாங்கு குடும்பத்திற்கு தேவையான அனைத்த உணவினையும் பக்குவமாக தெரிந்தெடுத்து ஒருங்கிணைத்து வளர்த்திருக்கின்றார். அதுவும் நகர்ப் பகுதியில் இடவசதி அருமையாக இருக்கின்ற இடத்தைத் தெரிவு செய்து அதில் சிறப்பாக வீட்டுத்தோட்டத்துடன் இணைந்த குடும்ப பண்ணையை அமைத்திருக்கும் விதம் சிறப்புக்குரியது. சமையலறைக் கழிவுகளை ஒரு வகை ஈக்களின் குடம்பியை வைத்து உக்க வைத்து பசளையாக்கி நிலத்திற்கு மீள் சுழற்சி செய்கின்றார்.

குடும்பப் பண்ணை முறைமை தற்போது மிகவும் பிரபல்யமாக வருவதற்கு பல காரணங்களை நாம் அடுக்கிக் கொண்டு போனாலும் அனைத்தையும் தாண்டி சிறு விவசாயியாகவே மாறியிருக்கும் சகாயநாதன் போனறவர்களின் இவ்வாறான உற்பத்திகளும் அவர்களின் விடா முயற்சியும் மக்களுக்கு தெரியப்படுத்தும் அதேநேரத்தில் அவர்களை இந்தத் துறைக்குள் ஊக்குவித்ததும் நல்ல செய்தியாகவே நாம் பார்க்கின்றோம்.

அவரின் இந்த முயற்சி பலரினதும் ஆர்வத்தினை தூண்டுவதாகவே அமைந்திருப்பது இன்னும் சிறப்புக்குரிய செய்தியாகும்.

கொரோன காலத்தில் உணவுக்கான பஞ்சம் வராமல் நாமாகவே உணவுற்பத்தியில் சிறுதளவிலாவது கரிசனை காட்டினால் அதற்கான் பிரதிபலனை நாம் எதிர்பாராமலேயே கிடைக்கும் என்பது ஐதீகம். இருப்பினும் அதற்கு பஞ்சம் இல்லையென்பதனை பஞ்சத்தை விரட்ட இவர் போன்றவர்கள் எடுத்திருக்கும் முயற்சிகள் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்பதனை எழுதும் இக்கைகள் விரும்புகின்றன.

உடலில் எதிர்ப்பு சக்தியை கூட்டும் உணவுகள் சேதன முறையில் உற்பத்தியான உணவுப் பொருட்கள் என அனைத்திலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். இது இன்னொரு விடியலுக்கான ஆரம்பப் புள்ளியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43 பேர்...

நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பெண்கள் 13 பேர் மற்றும் ஆண்கள் 30 பேர் என இவ்வாறு 43 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இலங்கையில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது மொத்த எண்ணிக்கை 3434 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வவுனியாவில்...

சுகவீனம் காரணமாக கடந்த மாதம் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து வவுனியா வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்றைய தினம் குருதிச் சுத்திகரிப்பு பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் மரணமடைந்துள்ளார். (ம-3,250,299)

## +1,515...

டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 271,461 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## பொலிஸாரின்...

தல்ல என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தொற்று நோய் ஏற்பட்டுள்ள நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டுமெனவும், பொலிஸாரின் செயற்பாடுகள் குறித்தும் தாம் தொடர்ச்சியாக விமர்சனங்களை முன்வைத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

போராட்டங்களை நடத்துவதற்கு மக்களுக்கு உரிமையுண்டு. எனினும் உலகம் முழுவதிலும் பெருந்தொற்று நிலைமை ஏற்பட்டுள்ள நிலையில் போராட்டக்காரர்களும் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ போராட்டத்தில் ஈடுபட்டார் எனவும் அப்போது அவருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டது எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-3)

## பசிலை ஆதரித்து...

திடு" எனும் கருப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தி, சிவில் சமூக அமைப்புகள், ஐக்கிய இளைஞர் சக்தி மற்றும் ஐக்கிய மகளிர் சக்தி என்பன ஒன்றிணைந்து சுதந்திர சதுக்கத்தில் நேற்று அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தின.

குறித்த ஆர்ப்பாட்டத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமை தாங்கினார்.

சுதந்திர சதுக்கத்தில் இன்று சுதந்திரத்தை தேட வேண்டியுள்ளது. ஒரே நாடு, ஒரே சட்டம் என்று சொன்னீர்களே என இவர்களுக்கு நாம் ஞாபகப்படுத்த வேண்டி உள்ளது. ஏனெனில், தங்கள் துன்பம், துயரம் காரணமாக மக்கள் தெருக்களுக்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள் என மனோ கணேசன் எம்.பி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவர்களை இந்த அரசின் பொலிஸ் படை கைது செய்து, சுய தனிமைக்கு அனுப்புகிறது. ஆனால், இந்நாட்டுக்கு அமெரிக்காவில் இருந்து, அலாவுதீனின் அற்புத விளக்குடன் வந்த பசில் ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து, பல இடங்களில் பலர் கூடிநின்று பட்டாசு வெடித்தார்கள். அவர்கள் மீது ஏன் இந்த கொரோனா சட்டம் பாயவில்லை?

அன்று ஒரே நாடு, ஒரே சட்டம் என்று நீங்கள்தானே சொன்னீர்கள். இன்று, பொது மக்களுக்கு ஒரு சட்டம், ராஜபக்ஷர்களுக்கு ஒரு சட்டமா?

மக்கள் தங்கள் துன்பங்களை நாட்டுக்கு தெரிவிக்க வேறு வழியில்லை. ஆனால், அரசாங்கம் பொலிஸை போட்டு, மக்களை கைது செய்கிறது. கொரோனாவை காட்டி, தனிமைப்படுத்துகிறது.

அதேவேளை பசில் ராஜபக்ஷ பலரை கூட்டி நிறுத்தி பதவி பிரமாணம் செய்கிறார். அவரை வாழ்த்தி அவரது கட்சி நபர்கள் கூடி நின்று பட்டாசு வெடிக்கிறார்கள். அவர்களை பொலிஸ் கண்டுகொள்வது இல்லை. இது என்ன நியாயம்?

இது சுதந்திர சதுக்கம். இங்கே இன்று சுதந்திரத்தை தேட வேண்டியுள்ளது. நீங்கள்தானே ஒரு நாடு ஒரு சட்டம் என்று சொன்னீர்கள். இன்று மக்களுக்கு ஒரு சட்டம். அரசனுக்கு இன்னொரு சட்டமா? என அவர் கேள்வி எழுப்பினார். (ம-3)

## நவாலி சென்.பீற்...

யின் 26ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் எம்.கே சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் கடந்த 1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09ஆம் திகதி விமான படையினர் வீசிய குண்டுவீச்சில் இடம்பெயர்ந்து தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த குழந்தைகள் பெண்கள் உள்ளிட்ட 147க்கும் அதிகமான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் நேற்று அதிகளவான மக்கள் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை குறித்த பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததுடன், தேவாலய வளாகத்தினுள் இராணுவத்தினரும் கடமையில் ஈடுபட்டிருந்தனர். (ம-3,33,104)

## 5,957 ஆசிரியர்...

பொதுமக்களுக்கு இரண்டாம் கட்டமாக கிடைக்கப்பெற்ற 50 ஆயிரம் கோவிட்-19 தடுப்பூசி மருந்துகளில் நேற்று 5ஆவது நாளில் 7 ஆயிரத்து 266 பேர் தமக்கான முதலாவது டோஸைப் பெற்றுக் கொண்டனர்.

கடந்த 5 நாட்களில் 45 ஆயிரத்து 722 பேர் கோவிட்-19 தடுப்பூசியின் முதலாவது டோஸைப் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் 10 ஆயிரத்து 354 ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலை உத்தியோகத்தர்கள் உள்ளதாக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவர்களில் 5 ஆயிரத்து 957 நேற்று கோவிட்-19 தடுப்பூசியின் முதலாவது டோஸ் வழங்கப்பட்டது. இது மொத்த உத்தியோகத்தர்களில் 57.53 சதவீதம் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-3,33)

## பண்டு...

சபைக்கு புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டத் தொடர் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளருக்கு 16 வாக்குகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளருக்கு 20 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன.

தயாசிறி ஜயசேகரவை "மொட்டு" கட்சி உறுப்பினர்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

இந்நிலையில், அவரின் கோட்டையில் "மொட்டு" கட்சி [illegible] அ ர ச ா ங்க

பின்னடைவாகவே பார்க்கப்படுகின்றது. அதுவும் பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வந்த நாளில் - அவர் அமைச்சராகப் பதவியேற்ற தினத்தில் இவ்வாறு இடம்பெற்றுள்ளமை "மொட்டு" கட்சி ஆதரவாளர்களை சினம் கொள்ள வைத்துள்ளது என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. (ம-3)

## பொலிஸார் சட்ட...

கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அநுரகுமார திஸாநாயக்க மேலும் கூறியுள்ளதாவது, "போராட்டங்களில் ஈடுபடுவதால், கொரோனா பரவும் விகிதம் அதிகரிப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஆனால், இலங்கையைப் பொறுத்த மட்டில் பேருந்துகளில் இன்னும் கூட்டமாகத்தான் பொது மக்கள் செல்கிறார்கள்.

அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து பல்வேறு நகரங்களில் மக்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டதையும் நாம் கண்டோம்.

இந்த நிலையில், போராட்டங்களை மட்டும் அரசாங்கம் கொரோனா வைக்காரணம் காட்டி தடுப்பதானது அடிப்படை உரிமை மீறலாகவே கருதப்படுகிறது என்றார். (ம-3)

## போராட்டம்...

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பாராளுமன்ற அமர்வில் அமைச்சர் சரத் வீரசேகர மேலும் கூறியுள்ளதாவது, "தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் போராட்டங்களை நடத்த நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் தடை செய்யப்பட்டுள்ளது.

இதில் பொலிஸார் தங்களின் கடமையையே மேற்கொண்டார்கள். எதிர்க்காலத்திலும் எவரேனும் போராட்டங்களை மேற்கொண்டால், பொலிஸார் அவர்களை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவார்கள்.

இதில் நாம் எப்போதும் சமரசங்களை செய்து கொள்ளப்போவதில்லை" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)



























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமைப்படுத்தல் சட்டத்தை பயன்படுத்தி அரசு தனது எதிரிகளை அடக்குகின்றது

## பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

அரசாங்கம் தனிமைப்படுத்தல் சட்டங்களைப் பயன்படுத்தி எதிரிகளை அடக்குமுறைக்கு உட்படுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பொய்களினால் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினாலும் பொய்களினால் பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் நீதியற்ற செயற்பாடுகளுக்கு நீதியான அரசாங்க அதிகாரிகளிடம் கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகங்களை அடக்கி ஒடுக்குவதற்கு அரசாங்கம் கோவிட் சட்டங்களைப் பயன்படுத்தி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். சட்ட விரோத உண்டியல் முறைமையின் ஊடாகவே இன்று வெளிநாட்டுப் பணக் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தின் செயற்பாடுகளினால் நாடு பெரும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (ம-03)

# பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதலை பின்பற்றினால்

## நாடு முழுமையாக திறக்கப்படும் சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டை முழுமையாகத் திறப்பதற்கான திகதியைத் தீர்மானிக்கும் காரணியாக பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில் உள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த காலகட்டத்தில், கொரோனா வைரஸ் தொற்று எந்த அளவிற்கு பரவியது என் பதை அதிகாரிகளால் தீர்மானிக்க முடியாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அனைத்து கட்டுப்பாடுகளையும் தளர்த்துவது குறித்து ஊடகங்கள் கேள்வி எழுப்பியபோது, "பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பது வைரஸ் பரவக்கூடிய வேகத்தை தீர்மானிக்கும் பல காரணிகளில் ஒன்றாகும்.

அனைவருக்கும் தடுப்பூசி போடப்பட்டால் நாடு தொற்றுநோயிலிருந்து விடுபடக்கூடும். அதுவரை பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும்" என்றார். (ம-03)

# ஒகஸ்ட் மாதத்திற்கு முன் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கு திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்திற்கு முன் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டின் கல்வி கட்டமைப்பை மீள ஆரம்பிப்பதற்கும் பாடசாலைக் கல்வியை மீண்டும் தொடங்குவதற்கும் முதல் கட்டமாக பரீட்சைகள் திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கான கோவிட்-19 தடுப்பூசி வழங்கும் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

ஆசிரியர்களுக்கான தடுப்பூசி திட்டம் ஆரம்பிக்கபட்ட நிலையில் அனைத்து ஆசிரியர்களும் இந்த மாதம் 12 ஆம் திகதி திங்கட்கிழமை தடுப்பூசி போடத்தொடங்க உள்ளனர். ஆசிரியர்களுக்கு தடுப்பூசி போட்ட பின்னர் முதல் கட்டமாக, 100 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 2 ஆயிரத்து 962 பாடசாலைகள் ஒகஸ்ட் மாதத்திற்குள் திறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

DEWMAS JOB BANK
வேலையாட்கள் தேவையா?
074 138 3368
யாழ். வேலை வாய்ப்புகளுக்கு
dewmasweb.com
51, Amman Road, Nallur. (7069)

Computer Operator ஆண் தேவை
ஹாட்வெயர் விநியோகத் தளத்திற்கு நன்கு கணனி அனுபவமுள்ள (குறிப்பாக MS Office) வேலையாள் தேவை. (C-2314)
021 222 9733
077 358 3693
076 686 1851
S.P.N MOTORS
No- 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நவீன இயந்திரத்தின் மூலம் மிகக் குறைந்த விலையில் தேங்காய் எண்ணெய் ஊற்றிக் கொடுக்கப்படும்.
மதுசாலினி அரைக்கும் ஆலை
பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் அருகாமை, இணுவில். (7154)
070 494 3990

Sales Representative Job
Immediate Vacancy for Distributor marketing representative for a well reputed company related to hardware business in the Northern Area. with Attractive Salary. (C-2315)
Please Forward CV : raviwarman@gmail.com
Contact Number : 077 358 3693

வேலையாள் தேவை
கச்சேரிக்கு அண்மையில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரத்துடன் வேலையுடன் கூடிய உணவு விநியோகத்தர் தேவை.
சிறந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
உரிமையாளர் (C-2312)
077 119 0011

6ஆம் மாத நினைவு



தோற்றம்
07.04.1984
மறைவு
17.01.2021
அமரர்
செல்வராசா ராஜகரன்
முப்பத்தாறாண்டு மூத்த முத்தாயிருந்து
அப்பழுக்கின்றி வாழ்ந்த அப்பனே! கரனே!
இப்போது மறைந்து ஆறு மாதம் இதயம் அழுகிறது
தப்பில்லா தம்பி சென்றுவா முத்திக்கு
உன் நினைவுடன் வாழும்
தாயார்
திருமதி நவரத்தினம் செல்வராசா
2ஆம் வட்டாரம்,
மு / புதுக்குடியிருப்பு. (C-2312)

BOC Travels
BOC Travels (pvt) Ltd
Hospital Road, Jaffna.
எமது நிறுவனமானது தற்போதைய Covid - 19 பரவல் காலத்திலும் விமானப் பயணச் சீட்டுக்களை வழங்குவதுடன் இணைந்ததான இதர சேவைகளையும் வழங்குகின்றது.
021 222 4575 / 76
070 384 9335
070 395 1794 (C-2311)

காணி விற்பனை
யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட ( யாழ். நகரில் இருந்து 1 1/2 Km தூரம் ) ஒட்டுமடம் சந்தி, மானிப்பாய் வீதி, முதலாம் ஒழுங்கையில் 03 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
( பிரித்துக் கொடுக்கப்படும்.)
1 பரப்பின் விலை 5 இலட்சம் மட்டும் (7173)
076 221 2037, 076 734 1023
077 064 2661

கனடா-STUDENT VISA
A/L எடுத்த மாணவர்கள் குறைந்த செலவில் கனடாவில் கல்வி கற்க இலவச ஆலோசனைகள்/அனுமதிகள் மற்றும் விசா ஏற்பாடுகள். (C-7309)
VISA APPLICATION
IELTS இலவசமாக கற்பிக்கப்படும்
(நிபந்தனைக்குட்பட்டது)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
0777-068-777

A/L ICT வகுப்பு
தனியாகவோ/ குழுவாகவோ உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
மாதிரி வினாத்தாள்களும் கற்பிக்கப்படும். (7159)
076 254 4297

அண்ணா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-2270)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-2269)
0768226240 DHL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.